# நாற்று

பெண்கள் மாத இதழ்



தை,மாசி-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமான
வீதிகளில் பயணம்
செய்தாலும் உங்கள்
நம்பிக்கைக்கு மோசடி
செய்யாத உதிரிப்பாகங்களை
விற்பனை செய்பவர்கள்

அழகியல் உதிரிப்பாக மாடத்தினர்

தரமான உறுதியான நீண்டகால
பாவனைக்குகந்த உதிரிப்பாகங்களை
கொள்வனவு செய்ய

நாடவேண்டிய இடம்

அழகியல் உதிரிப்பாக மாடம்

சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்று

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 35823

நாற்று -01 நடுகை - 01

இனியவர்களுக்கு,

நாற்று நிறைந்த நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் உங்களை நாடி வருகிறது.

நாற்று இங்கே ஒவ்வொரு பெண்ணும் சுயமரியாதையோடு வாழ வேண்டும் என விரும்புகிறது.

நாற்று பெண்களின் விழிப்புணர்வை வேண்டி நிற்கிறது

நாற்று ஆண்களின் மனவுலக மாற்றத்திற்கு உற்றதுணையாகிறது.

நாற்று ஒவ்வொரு பெண்ணும் தன்னைத்தானே அறிந்து கொள்ளும் நிலைக்கண்ணாடியாகின்றது.

நாற்று 'பெண்விடுதலை' என்ற பதத்தின் பல்வேறுபட்ட தவறான புரிந்து கொள்ளல்களை களைய நினைக்கிறது.

நாற்று பெண்களின் பிரச்சினைகளையும் தீர்வுகளையும் பல்வேறுபட்ட துறைகளில் அவர்களின் ஆற்றல்களையும் தாங்கி வருவதாக இருப்பினும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரினது மனங்களையும் தனது விளைநிலமாக வரித்துள்ளது.

நாற்று உங்களுடையது. இதற்கு நிலம் கொடுத்து நீர் வார்த்து உரம் சேர்த்து ஆரோக்கியமாக வளர்த்து எடுக்க வேண்டிய பொறுப்பு உங்கள் அனைவரிடமுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்று

'நாற்று'

உருவாக்கம்
ஆசிரியர்குழு

ஓவியங்கள்
தயா, சிரித்திரன் சுந்தர்

அச்சுப்பதிப்பு
மாறன் பதிப்பகம்
யாழ்ப்பாணம்

இதழமைப்பு
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

தொடர்புகள்:-
நாற்று பணியகம்
இராசவீதி, கல்வியங்காடு,
கோப்பாய்.

விலை ரூ. 20/-

உள்ளே துளிர் விடுபவை


03 அனைத்துலகப் பெண்கள் நாள்
05 துணிவு - கவிதை
07 பெய்ஜிங் 95
08 நாங்கள் சுமைகளல்ல
14 அர்ப்பணம்
15 இளவயது திருமணங்கள்
18 முதன்மைப் பெண் பத்திரிகையாளர்
21 மனநோய் சுகாதாரப் பிரச்சினைகள்
26 கரிபியப் பிரதேச பெண்கள் அமைப்புக்கள்
37 சாதனையும், வேதனையும்
45 கலையுலகில்
46 விளையாட்டுலகில்
47 பெண் ஆய்வுகளும் அதன் தேவைகளும்
52 தாபரிப்பு
54 உங்களோடு ஒரு நிமிடம்
56 சிக்கனமான சமையலுக்கு...
58 எல்லைகளின் விளிம்பில் ஓர் விமர்சனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலகப் பெண்கள் நாள்

## எமது தமிழீழப் பெண்களின் நிலை ஒரு இலட்சிய வடிவம் அடைந்து வருகின்றது.

உலகத்தின் எந்தப் பகுதியிலும் அதிகமான முன்னேற்றமடைந்த நாடுகளில் - ஏதாவது ஒரு நாட்டில் கூட - பெண்களுக்கு ஆண்களோடு முழு அளவுக்குச் சமமான உரிமைகள் எந்தக் காலத்திலும் இருக்கவில்லை. மகத்தான பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்று சுமார் நூற்றுமுப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாகவே ஆனபிறகும் கூட இந்த நிலை இருக்கிறது.

1857 மார்ச் 8ஆம் நாள். நியூயோர்க்கில் நெசவுப்பெண் தொழிலாளர்கள் தொழிற்சங்கரீதியாக அணிதிரண்டு உரிமைப்போரில் குதித்த நாளாகும். இந்த நாளை நினைவு கூரும் முகமாகவே மார்ச் 8ஆம் நாள் பெண்களின் முன்னேற்றத்திற்கான எழுச்சி நாளாக உலகளாவிய ரீதியில் எல்லா நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஏனைய நாடுகளில் பெண்கள் வாழ்க்கையை மேம்படுத்த போராட்டம் நடத்துகையில், எமது பெண்கள் வாழ்க்கை நடத்துவதற்கே போராடவேண்டிய நிலையில் உள்ளனர். எமது தமிழீழத்தை பொறுத்த வரையில் பெண்களின் உரிமைகள் பற்றிய சட்டங்களில் பெண்களின் சமத்துவம் பேணப்பட்டிருக்கின்றது. ஆனால் வெறும் சட்டங்கள் மட்டும் போதுமானவை அல்ல;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு வேலை செய்யும் பெண்களின் வேலைப்பளு இன்னும் குறைக்கப்படவில்லை. பெண்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தக்கூடிய பொது வேலைகளில் அவர்கள் ஈடுபட முடியாமல் (விருப்பம் இருந்தும்) இவ்வேலைகள் தடுக்கின்றன. தொழில் பார்க்கும் பெண்கள் கூட தமது வெளிவேலையுடன் இந்த வேலைப் பளுவையும் சுமப்பவர்களாகவே எமது தமிழீழப்பெண்கள் உள்ளனர். ஒரு குடும்பத்தில் உள்ள உறுப்பினர் அனைவரும் அந்தக் குடும்பத்தின், வேலைகளை தமக்குள் பங்கிட்டு செய்வதன் மூலம் எல்லாப் பெண்களும் தமது நேரத்தை மீதப்படுத்தி சமூக வேலைகளில் குழுவாகவோ, தனியாகவோ ஈடுபட்டு தமது கிராமத்தையும் சமூகத்தையும் மேம்படுத்த வாய்ப்பளிக்கலாமே.

இன்று பெண்களின் வேலைப்பளுவைக் குறைக்கக்கூடிய வகையில், குடும்ப வேலைகளிலிருந்து விடுவிக்கக் கூடிய குழந்தை வளர்ப்பு நிலையங்கள் முன்மாதிரியான அமைப்புக்கள் போன்றவற்றை எமது பெண்களே முன்னின்று அமைத்து வருவது பாராட்டக்கூடியதாகும்.

மதம், மரபு.சாத்திரம்,சடங்கு என்று பழைமை வாதிகளால் ஒடுக்கப்படுதல், பெண்களே பெண்விடுதலைக்கு, பெண்கள் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் கொடுமை போன்ற அறியாமைகளை போக்கும் முயற்சியில் ஈடுபடுவதுதான் பெண் ஒடுக்கு முறைக்கெதிராக மேற்கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கையாகும்.

எமது தமிழீழப் பெண்களின் நிலை ஓர் இலட்சிய வடிவம் அடைந்து வருகின்றது. எனினும் இது ஒரு நீண்டபயணத்தின் ஆரம்பம் மட்டுமே. அனைத்துலகப் பெண்கள் நாளில் எமது இலட்சியப் பயணத்தில் புதிய இலக்குகளை அடைவதற்கு எமது தமிழீழப் பெண்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றோம்.

– பெண்கள் ஆய்வு நிறுவனம்.

ஐயா! மாதர்களை இருட்டிலே தள்ளிவிட்டு அவர்கள் அறியாமல் நீங்கள் மேலான நிலைமைக்கு வந்து விடுவது வீண் முயற்சி. அது ஒருபோதும் நடக்க மாட்டாது.

-சகோதரி நிவேதிதாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "துணிவு"

- ஸ்ரீகலா -

பெண்ணே
நீ
விழித்து எழுவதற்கு
எது முட்டுக்கட்டை
நீ
உன்னை உயர்த்துவதற்கு
எது தடை
நீ
உன் ஆற்றலை வளர்ப்பதற்கு
எது முட்கம்பி
ஒட்டு மொத்தமாக
நீ
வெளியே வராமல் இருப்பதற்கு
உனக்கு எதைக்காட்டி
பயமுறுத்துகிறார்கள்
ஓ..................
புரிந்து கொள்கின்றேன்
பெண்ணே புரிந்து கொள்கின்றேன்
உனக்கு எதைக்காட்டி
பயமுறுத்துகிறார்கள் என்று
கல்யாணம் பெண்ணே!
கல்யாணம்!
கல்யாணத்தைக் காட்டி.
கட்டிப் போடுகிறார்கள் - உன்னை
கடுமையான இருளில்
பெண்ணே
நீ துணிந்தால் - உன்னால்
வெளிச்சத்தைப் பார்க்க முடியும்
நீ துணிந்தால்
தூணாக உயர்ந்து
உன்னாற்றலை வளர்க்க முடியும்
பெண்ணே
சமூகம் க(ா)ட்டும்
கல்யாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைக் கட்டி
காட்டில் விடும் வித்தை
விஷமான வித்தைக்கு
பலியாக்காதே உன்னை.
உன்னால் புரிந்து கொண்டவனை
உன்னை முழுமையாக நேசிப்பவனை
உன் விருப்பு வெறுப்புகளை
புரிந்து கொண்டவனை
புத்திசாலித் தனமாக
புருஷனாக ஏற்றுக்கொள்
கண்ணியமான கல்யாணம்
இதுதான் பெண்ணே !
பெண்ணே - நீ
துணிந்து நின்றால் - உன்
எதிர் காலம்
கருங்கல் தூணாகும்
பெண்ணே !
துணிந்தபின்
துயில் கொள்ளாதே !

## கவிதை/ சிறுகதைப் போட்டி

எழுத்தார்வம் மிக்கவர்களுக்கான போட்டி
"சிகரங்களை நோக்கி"

மேலே குறித்த தலைப்பில் உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பவும்.

பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைமையப்படுத்தியதாகவும் சொந்த கற்பனையில் உருவாகியதாகவும் ஆக்கங்கள் அமைய வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த படைப்புக்கு (கவிதை, சிறுகதை) பரிசில் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி: -
தமிழீழப்பெண்கள் ஆய்வுநிறுவனம்,
இராச வீதி.
கல்வியங்காடு,
கோப்பாய்.

☐ இந்த முகவரியை தபால் உறையில் வெட்டி ஒட்டி அனுப்பவும்.

போட்டி முடிவுத் திகதி :- 1995 - 01 - 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெய்ஜிங் 95 □□

## □□ செய்திமடல்

1995 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சீனாவில் நான்காவது உலகப் பெண்கள் மகாநாடு ஒன்று நடைபெற உள்ளது. 1975ஆம் ஆண்டு முதல் இது போன்ற மூன்று மகாநாடுகள் நடைபெற்றுள்ளன.

உலகம் எங்கிலும் உள்ள பெண்கள் எல்லோரும் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை அடையாளம் காண்பதும், அவற்றின் தீர்வு குறித்து ஆலோசிப்பதும், செயற்படுவதும் இம்மகாநாட்டின் முக்கிய நோக்கமாகும் மேலும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெவ்வேறு பிரதேசங்களையும் நாடுகளையும் சேர்ந்த பெண்களிடையே சர்வதேச ரீதியில் பலம்வாய்ந்த ஒருங்கிணைப்பை நிறுவுவதும் இம்மகாநாட்டின் நோக்கமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒழுங்கமைப்பிலும் அதற்குச் சமாந்தரமாக அரசசார்பற்ற பெண்கள் நிறுவனங்களின் ஒழுங்கமைப்பிலுமாக இம்மகாநாடுகள் இருகட்டத்தில் நடைபெறுவது வழக்கம். முறையே 1975, 1980, 1985 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு நடைபெற்ற மகாநாடுகளின் விபரங்கள் இச்செய்திமடலில் தரப்பட்டுள்ளன.

இம்மகாநாட்டுக்கு இலங்கையைச் சார்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்களிக்க வேண்டுமென விரும்புகிறோம். அதற்காகவே நாம் இலங்கைப் பெண்களின் அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டு (SLNWNGOF) என்ற அமைப்பை நிறுவினோம். இதன் மூலம் இலங்கையில் செயல்படும் பெண்கள் அமைப்புகள் தமது கருத்துக்களையும் கோரிக்கைகளையும் சர்வதேச மட்டத்தில் எதிரொலிக்கலாம் எனக் கருதுகிறோம். இதற்காக தங்கள் ஒத்துழைப்பை நாடுகிறோம். இச்செய்திமடல் மூலம் 95 மகாநாடு பற்றிய தகவல்களை அவ்வப்போது அறிவிப்போம். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



# நாங்கள் சுமைகளல்ல

"பூம்பாவை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா இனி வரமாட்டாள். இரத்தமும் சதையுமாய் அந்த வீட்டில் சுறுசுறுப்பாய் வளைய வந்தபடி திரிந்த அம்மா அந்தச் சுவரின் நான்கு சட்டத்துக்குள் அடங்கி விட்டிருந்தாள். கருகிப்போன மாலை காற்றில் அசைந்தது. அந்த அடையாள அட்டையின் சாய்ந்த புகைப்படத்தில் என்ன இளமையாய் அழகாய் பின்னைய தோற்றத்துக்கும் அதுக்கும் எதுவித சம்பந்தமுமில்லாதவளாய் சிரித்தபடி இருந்தாள். அவள் இதயம் நம்ப மறுத்தது. அம்மாவினது முப்பத்தொருநாட் கிரியைகளும் நேற்றோடு முடிந்துபோய் வீட்டை வெறுமையான அமைதி குடிகொண்டிருந்தது.

''பிள்ளை தண்ணி எடுத்துக்கொண்டு வாமேனை''

அப்பாவின் குரல் மெல்லியதாய் சுரத்தேயில்லாமல் ஒலித்தது. அப்பாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. முப்பத்து மூன்று வருட வாழ்க்கையின் நிழலாய் நின்ற அம்மா, நல்லது கெட்டது எல்லாவற்றையுமே பகிர்ந்து கொண்டு கணவனுக்கு அடங்கிய மனைவியாக வாழ்ந்து மறைந்துபோன வரலாறு, அந்த வாசற்படியில் நின்றபடி கதவு நிலையின் விளிம்பைப் பிடித்தபடி எதற்கும் அவரின் அனுமதிகேட்டு யாசிக்கும் அவள் விழிகள் ... எல்லாமே அந்த வீட்டின் பிரமைபோல .. அவளது விழிகள் கலங்கித் துடித்தன. சமையலறைக்குள் அம்மா எரியாத விறகுகளோடு போராடிக் கொண்டு இருமுகிற சத்தம் மனதின் பிரமைபோல இருந்தது. எல்லாமே அம்மாவின் வாழ்ந்து மறைந்துபோன சுவடுகளாய் இருந்தன.

அப்பா கதிரையிற் சாய்ந்தபடி கூரை முகட்டை வெறித்தபடி இருந்தார். ஒன்றையொன்று கொழுவி பின்னியபடி இருந்த சிலந்தி வலையில் அவரது பார்வை பதிந்தது. நெற்றியை சுருக்கியபடி எதையோ பற்றி தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தார். ஊருக்கெல்லாம் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்த கனகசபை மாஸ்டரின் அந்தத் துடிப்பான காலங்கள் ஒடுங்கிப் போய் விட்டிருந்தன. வயது. முதிர்ச்சியும் கவலைகளும் அவருக்கு மிகுந்த வயோதிபத் தோற்றத்தைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதா கண்களிற் குடிகொண்ட கவலை, மகளின் திருமணம் பற்றிய நினைப்பு இவற்றோடுதான் அவரது காலங்கள் போய்க் கொண்டிருக்கின்றன.

''அப்பா இந்தாருங்கோ!''

மகளின் குரல்கேட்டு கனகசபை மாஸ்டர் சுயநினைவுக்கு வந்தார். செம்பை வாங்கி தண்ணீரை மடமடவென்று குடித்தார். மகளின் முகத்தை ஏறிட்டார். நீண்டதொரு பெருமூச்சு அவரிடமிருந்து சுழித்து அடங்கியது.

''அப்பா ...... ஏன் இடிஞ்சுபோய் இருக்கிறியள்!'' மகளின் கேள்வி அவரை உலுப்பியிருக்க வேண்டும்.

''இல்லைப்பிள்ளை, அவள் போட்டாள். நல்லசாவு. இருந்து துன்பப்படாம, ஆருக்கும் கஷ்டம் குடுக்காம போய்ச்சேர்ந்திட்டாள்.

''ஆனால் ஓரேயொரு குறை, அது உன்னை எப்படிக்கரை சேர்க்கிறது எண்டுதான். கடைசிவரைக்கும் அதுதான் அவளுக்கு கவலை.''

''என்ரை பிள்ளைக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்து பாக்காமல் போறனே எண்டு கடைசியாச் சொல்லி அழுதாள்.'' அப்பாவின் உதடுகள் துடித்தன. வாழ்க்கையில் அழுதறியாத கண்களில் நீர் முட்டியது.

அவளுக்கு 'கோ' என்று கதறி அழவேணும்போல இருந்தது.

'அதைவிடு மேனை கடைசியாய்ப் பொருந்தின சம்மந்தம் நல்லது மேனை;

பெடியனிலையும் குறைசொல்லுறதுக்கு ஒண்டுமில்லை. ஆனால் சீதனக்காசு தான்...... அவை கேக்கிற தொகையை என்னண்டு குடுக்கிற தெண்டு யோசிக்கிறன். அவள் இருந்தால் ஒருமாதிரி எப்படியோ ஒப்பேத்திப் போடுவாள். அவள் கெட்டிக்காரி. என்ரை சம்பளத்தில் குடும்பத்தைச் சாமளிச்சு மிச்சம்பிடிச்சு எல்லாத்தையும் குருவிமாதிரிச் சேர்த்தாள்.

''அப்பா எனக்கு கலியாணம் வேண்டாம்''

அப்பா அவளைப் புதினமாக ஏறிட்டார்.

''உதென்ன விசர்க்கதை மேனை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாளைக்கு ஊருலகம் என்ன சொல்லும். ஒரேயொரு பெட்டையைப் பெத்த வாத்தி. அதுக்கொண்டு ஒரு நல்லகாரியத்தைப் பண்ணாமல் தனிமரமா விட்டுட்டுப் போட்டான் எண்டெல்லே சிரிக்கப்போகுதுகள்.''

அவளுக்கு ஒரு புறம் சிரிப்பாக இருந்தது. முப்பத்திரெண்டு வருட வாழ்க்கையில் எத்தனை திருமணப் பொருத்தங்கள். எல்லாம் முற்றாக்கி நாள் பார்த்து குழம்பியபோது அவள் உள்ளுக்குள் உக்கிப்போனாள். கனவுகள் உடைந்து போய் கற்பனைகள் சிதறிப்போய்......

''என்னப்பா, அப்பா வாறமாதம் எல்லாருக்கும் சாப்பாடு தரப்போறீர் எண்டு சொல்லுமன்''

அவளது சக ஆசிரியைகள் அவளைக் கேலிசெய்து நின்ற போது அந்தத் திருமணம் குழம்பிப் போனது. எதிர்பார்ப்புக்களும் நம்பிக்கைகளும் கலைந்து போனது. கடைசியில் அம்மா அந்தத் திருமணத்தை தான் நடாத்திக் காட்டுவதாக கூறி ஓடியலைந்து திரிந்து. அதுவே அம்மாவுக்கு நோய் வரக்காரணமாக அமைய இருந்ததெல்லாம் பழைய கதை.

''உவர் வாத்தியார் அந்த ஐம்பதினாயிரம் டொனேனைத் தர்றதுக்கு ஏலாதாம். பிறகென்னண்டு நாங்கள் சம்மதிக்கிறது''.

மாப்பிள்ளை வீட்டுக்காரர் அடித்துச் சொன்ன போது எல்லாமே நொருங்கிப்போனது. அம்மா மட்டும் உள்ளூர ஒரு நப்பாசையோடு,

''உது நல்ல பொருத்தமப்பா. வாழுற பிள்ளை, எப்படியாவது கடன் பட்டாவது நடாத்திப்போடவேணும்''

இருந்த நம்பிக்கையின் கடைசித்துளியும் அறுந்துபோனது.

''அம்மா எப்படிக் கஷ்டப்பட்டாய்'', எப்படி நம்பிக்கையோடு சொன்னாய்''

அம்மாவின் இதமான பார்வை அவளை ஆறுதற்படுத்துவது போலத் தோன்றியது. கருகிய மாலை காற்றுக்கு அசைந்தது. வாஞ்சையோடு தலையைத் தடவியபடி பள்ளிக்கூடத்துக்கு வழியனுப்பி வாசலிற் பார்த்தபடி நிற்கும் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எப்படிப் படிச்சும் என்ன பிள்ளை இன்னொருத்தர் வீட்டுக்குப் போனால் அவையிட்ட நல்லபேர் வாங்கிறதுதான் பிள்ளை பொம்பிளைப்பிள்ளைக்கு சிறப்பு''

''அம்மா உன்னைவிட்டுட்டு ஒருடமும் போகமாட்டனணை,,

''உதென்ன விசர்க்கதை கதைக்கிறாய். பிறகு எங்களைப் பார்த்துத்தான் சனம் குறை சொல்லும்'' . அம்மா கடைசியில் சுற்றிச் சுற்றி வந்து அதிலையே நிற்பாள். அவளுக்கு எரிச்சலாக இருக்கும்.

''பிள்ளை இண்டைக்குப் பள்ளிக் கூடம்போகேல்லையே''

அப்பாவின் குரல் அவளை உலுக்கியது. அவளுக்கு பள்ளிக் கூடம்போகாமல் விடவேணும் போல் இருந்தது. அப்பா தனிய யோசித்துக் கொண்டிருப்பார். அந்தக் கடைசியாக வந்த சம்மந்தம் எப்படியாவது திருப்தியாய் முடியவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார்.

''பிள்ளை நேற்று அவன் ஸ்ரீராமனைக் கண்டனான். பெடியன் தலையாட்டிப் போட்டு போறான். எந்தப்பள்ளிக் கூடத்திலை பிள்ளை படிப்பிக்கிறான்?''

எனக்குத் தெரியாது என்னுமாப்போல அவள் தலையாட்டினாள்.

அவளும் ஒரு ஆசிரியை தானே அவனைப்போலப் பட்டதாரியாகத்தானே இருக்கிறாள். அந்தப் பத்தாயிரத்தை அப்பாவால் கொடுக்க முடியாது என்பது அவளுக்குத் தெரியும்.

வீடு வளவு நகைகள் அதுவேறு விடயம். இது? அப்பாவின் விழிகள் முகட்டுவளையில் படிந்தபடியே இருந்தன.

அப்பா எப்பவுமே இப்படித்தான் ஒரு பிரச்சனையெண்டா அதைப்பற்றியே நாள்முழுக்கச் சிந்தித்தபடி இருப்பார். அதை விட்டு அகலமாட்டார்.

பள்ளிக்கூடம் போனாலாவது அந்தப்பிள்ளைகளைப் பார்த்து கொஞ்சம் மனசுக்குத் தென்பு வரும். வெள்ளைச் சீருடையில் சிறகடித்தபடி எவ்வளவு கலகலப்பாகத்திரிவார்கள். அவளது மனம் அவர்களைப்போல குழந்தைகளாய் இருக்க ஏங்கியது. எதற்கும் கவலையற்று புத்தகச்சுமைகளை பைகளிற் தாங்கியபடி அம்மாவிடம் விடைபெற்று துள்ளிவரும் காலங்கள் எவ்வளவு இனிமையான பொழுதுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிள்ளை நேரம் போகுதெல்லெ''

''ஓமோம் நான் வெளிக்கிட்டுட்டன்''.

அப்பா அவளை வழியனுப்பி வைத்தார்.

வயல் வெளியை ஊடறுத்தபடி சைக்கிளில் போவது மனதுக்கு இதமாக இருந்தது. நேற்றுப் பெய்த மழையால் நெற்கதிர்கள் தண்ணீருக்குள் படுத்துக் கிடந்தன. பார்க்க கவலையாய் இருந்தது. எந்தத் தகப்பன் தனது மகளின் திருமணச் செலவுக்கு பட்ட கடனை அடைக்கவென இந்த விளைச்சலை நம்பியிருந்தானோ? மனம் ஏமாற்றத்தால் கூம்பியிருக்கும்.

எதிர்க்காற்றில் சைக்கிள் மிதிப்பது அவளுக்குச் சிரமமாயிருந்தது. எதிரே வருவது எங்கோ பார்த்த முகமாக. சந்தேகமில்லை, அது அவன்தான். அவனும் அவளைக் கண்டிருக்க வேண்டும்.

ஸ்ரீராம் பள்ளிக்கூடம் போறான் போலை. அவளுக்குப்படபடப்பாக இருந்தது. அப்பாவின் கவலை நிறைந்த முகம் நினைவில் நின்றது. அப்பா எவ்வளவு கஷ்டப்படுகிறார். அப்பாவால் முடியாது.

சொல்லி விடுவோமோ?

''ஒரு நிமிசம் நில்லுங்கோ'' அவளுக்கு எங்கிருந்துதான் அந்தத்துணிவு வந்ததோ. ''உங்களால கேட்கிற தொகையை எங்களாலை தரமுடியாது. நீங்கவேறு இடத்திலை பாருங்கோ''

அவனுக்கு அது எதிர்பார்த்தது போல் இருந்தது. அவன் ஒருகணம் அவளை ஏறிட்டபடி 'சரி' என்று தலையாட்டியபடி சென்றான்.

அவளுக்கு இன்னும் நம்பமுடியாமல் இருந்தது. தானா அப்படிச் சொன்னேன். அப்பாவை நினைக்க ஒருபுறம் பயமாக இருந்தது. ஆனால் தனது பதில் அவளுக்குத் திருப்தியாக இருந்தது.

அப்பா அன்று மிகுந்த கோபமாக இருந்தார். அப்படி கோபமாக இருந்த அப்பாவை அவள் ஒருபோதும் பார்க்கவில்லை. ''வெண்ணை திரண்டுவர தாழியை உடைச்சுப்போட்டியே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏனிப்படிச் செய்தனி''

''நான் கதைச்சு அந்தத்தொகையைக் குறைச்சு செய்யலாமெண்டு நிண்டனான் மேனை. இப்ப என்னெண்டால் நீ எல்லாத்தையும் குழப்பிப்போட்டாய்''

''உன்ரை கலியாணத்தை இனி எப்படி நடாத்தபோறன் பிள்ளை'

''நான் சுமை இறக்கிவைச்சமாதிரி இருந்தன் நீ ஏனிப்படிச் செய்தாய்'' அப்பாவின் கைகள் படபடத்தன.

''அப்பா நான் உழைக்கிறன். என்னைச் சுமையா நினையாதையுங்கோ ஒரு நாளும்''

''அப்ப என்ன நீ காலம்பூராவும் இப்படியே இருக்கிறதெண்டு முடி வெடுத்துட்டியே?''

அப்பிடியில்லை.

''என்னைப் புரிஞ்சுகொண்ட ஒருத்தரா சொத்துக்காக என்னை வாங்குறநோக்கம் இல்லாத ஒருத்தரா, எனக்கு வருகிறவனுககாக நான் காத்திருப்பன்''.

''என்னையும் தன்னைப் போல ஒரு ஆளா நினைக்க வேணுமப்பா''.

அவளது உதடுகள் துடித்தன. உயர்ந்த தொனியில் அதுவரை கேட்டிராத அவரிடம் எதிர்வார்த்தை பேசியறியாத அவள் குரல் அப்பாவுக்குள் எதையோ தட்டியெழுப்பியிருக்க வேண்டும். அவர் மௌனமாக அவளைப்பார்த்தார். அதில் பெருமை பொங்கியிருந்தது. □

## அர்ப்(பணம்)

உங்கள் கரங்களில்
  நோட்டுக் கற்றைகளை
வாரி இறைத்தபின் தான்
  உங்களால்
எங்கள் கரங்களை
  குலுக்க முடிந்தது.
எங்கள் சேமிப்பு
  பானங்களை கரைத்து
உங்களுக்கு புகட்டி
  உயிரூட்டிய பின் தான்
உங்களால்
  எங்கள் கழுத்தை
அலங்கரிக்க முடிந்தது.
  தாலிக்கும் மாலைக்கும்
மட்டும் தான்
  நாங்களா?
அப்படியாயின்
  தலைகுனிவதற்கு ..........
நீங்கள்!

– ரூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வயதில் திருமணம்
செய்யும்போது குடும்பம் நடத்தக்கூடிய பொறுப்புணர்ச்
சியோ, மனப்பக்குவமோ குறைவாகவே
காணப்படும். மேலும் தமது வயதை ஒத்த ஏனைய
பெண்கள் பொறுப்புகள் அற்றவர்களாகவும் குழந்தைத்
தனத்துடனும் வாழும்போது இதுவும்
இப்பெண்களில் ஒருவித மன நிலைப்பாதிப்பை ஏற்
படுத்தி, குடும்பத்தின் நல்லுறவு
சீர்குலையும் சந்தர்ப்பங்களுக்கும் இட்டுச்செல்லும்.

# இளவயது திருமணங்கள்

## ஓர் வைத்திய ஆலோசனை.

பத்மலோஜினி

ஒருவரையொருவர் நன்கு புரிந்துணர்ந்து கொண்ட ஆணும் பெண்ணும் தமக்குள் அன்புறவு கொண்டு, புதிய தலைமுறையைத் தோற்றுவிப்பதற்காக இணைந்து கொள்வதையே திருமணம் என நாம் கருதுகின்றோம்.

திருமணத்தினால் உருவாகும் குடும்பம் சமூக மேம்பாட்டுக்கும் இன உருவாக்கத்துக்கும் அடிப்படை அலகாக உள்ளது. எனவே இவை நன்மை பயக்கக்கூடிய முறையில் நிறைவேற திருமணம் புரிபவர்களின் உள்ளங்கள் பக்குவப்பட்டிருத்தலும், உடலின் உருவவியல், உடற்றொழிலியல் நிலைப்பாடுகள் அவற்றின் சிறந்த நிலையில் இருக்க வேண்டியதும் முக்கியமாகும்.

ஒரு பெண் பூப்பெய்திய பின் கர்ப்பம் தரிக்கக்கூடிய தன்மையைப் பெறுகின்றாள். பூப்பெய்தல் பொதுவாக 11 - 15 வயதுகளில் நடைபெறலாம். ஆனால் பூப்பெய்தியவுடனேயே அவள் பிள்ளை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் உள்ளாள் என்று கூற முடியாது. பூப்பெய்தலுக்குப் பின்பும் உருவவியல், உடற்றொழிலியல் வளர்ச்சியும் மாற்றங்களும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கும். 19 - 21 வயதுகளில் இவை உச்சநிலையை அண்மிக்கும். இது கர்ப்பத்துக்கும் பிரசவத்துக்கும் ஏதுவான நிலைகளைக் கொண்டிருக்கும்.

எனவே இவ்வளர்ச்சி நிலைக்கு முன் கர்ப்பந்தரிக்கும் பெண்கள் கர்ப்பகாலத்திலும் பிரசவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் போதும் பலவகையான சிக்கல்களை எதிர்நோக்கவேண்டி இருப்பதுடன், தாய், சேய் சாவு விதங்களும் இவர்களில் உயர்வாகவே காணப்படுகின்றன.

இளம்கர்ப்பிணித் தாய்மாருக்கு குழந்தைப்பேறு காலத்தில் உயர் குருதியமுக்கமும், வலிப்பும் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். இதனால் தாய்க்கோ, சேய்க்கோ இருவருக்குமோ சாவு ஏற்படலாம்.

மற்றும் பேறு காலத்தை அண்மிக்கும் நிலைகளில் இடுப்பு வளையத்தின் வளர்ச்சி போதாதாகையால் சேயின் தலை கீழ் இறங்குவதிலும் தடங்கல் ஏற்படும். பேறுகாலத்தின் போது குழந்தை வெளிவர எடுக்கும் நேரம் சாதாரணத்தைவிட கூடுதலாக இருக்கும்.

குழந்தைப்பேற்றில் மருத்துவரின் சிகிச்சை முறைகளும், ஆயுதத்தின் உதவிகொண்டு குழந்தைப் பேற்றை மேற்கொள்ளலும் இவர்களில் அதிகம் தேவைப்படும். சத்திர சிகிச்சை மூலம் (Caesarean section) குழந்தைப்பேற்றை நடத்தவேண்டிய சந்தர்ப்பங்களும் இவர்களில் அதிகம் உருவாகும்.

பெண்ணின் இனவிருத்திக்கான உச்சநிலை 18 - 30 வயதாகும். இக்காலத்தில் விவேகம் குறைந்த பிள்ளைகளின் பிறப்பு வீதமும் குறைவாகக் காணப்படும். இள வயதில் திருமணம் செய்து அதனால் இளவயதிலேயே உடலுறவு கொள்ளுதல் சனனித்தொகுதியில் ஏற்படும் கருப்பை வாய்ப் புற்றுநோய் (Carvical carcinoma) ஏற்படுவதற்கான காரணிகளில் ஒன்றாகக் கூறப்படுகின்றது.

மேற்கூறிய கருத்துக்களின்படி இளந்தாய்மார் என்று நாம் கருத்துக் கொடுப்பது பூப்பெய்திய பின் 18 வயதுவரை உள்ள பெண்களையே. இவ்வயதுக்குட்பட்ட பெண்களில் பொதுவாக தாய்மைக்குரிய உளநிலைப்பக்குவ நிலை திருப்திகரமாக இருக்காது. இவ்வயதில் கல்லூரிப் படிப்புடனும், தங்கிவாழும், பொறுப்புகள் அற்ற நிலையிலுமே பெரும்பாலான நமது பெண்கள் உள்ளனர்.

மேலும் தானே குழந்தைத் தனம் மாறாமல் இருக்கும் நிலையில், ஒரு பிள்ளையையும் பெற்றெடுத்து வளர்க்கும்போது இது மீண்டும் தாய்க்கும் பிள்ளைக்கும் உளவியல் சிக்கலை ஏற்படுத்தும். குழந்தைகள் சரியாகப் பராமரிக்கப்படாது, தாய்ப் பாலூட்டப்படாத நிலைமைகளை ஏற்படுத்துவதுடன், பிள்ளைகள் தாய்மாரால் துன்புறுத்தப்படவும் கூடும். (Baby battering)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இளவயதில் திருமணம் செய்யும் பெண்கள் தொடர்ந்து கல்வி கற்க முடியாத நிலையும், தொழில் பார்க்க முடியாத நிலையும் ஏற்படும். இது மீண்டும் உளவியல் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதுடன், பொருளாதார சிக்கலிலும் பெண்களை மாட்டிக்கொள்ளச் செய்யும்நிலைமையை உண்டு பண்ணும்.

மொத்தத்தில் இள வயது திருமணங்கள் ஒரு சமுதாய மேம்பாட்டுக்கு உகந்ததல்ல என்பது பொதுவான மருத்துவ உளவியல் கருத்தாகும்.

★ சகலவிதமான பாடப்புத்தகங்கள்

★ நாவல்கள்,

★ சஞ்சிகைகள், பாடசாலை

★ ஸ்ரேசனறிகள் பத்திரிகைகள்

நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

"பூபாலசிங்கம் பொத்தக நிலையம்"

255, லெப். கேணல் ராஜன் சாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்மைப் பெண் பத்திரிகையாளர்

இதழுக்கு இதழ் அவர் அமெரிக்கப் பெண்களின் கல்வி, படிப்பு, தொழில், சொந்தமாகப் பணம் வைத்துக் கொள்ள வேண்டிய தன் அவசியம் எல்லாவற்றையும் வற்புறுத்த ஆரம்பித்தார். 'ஏதாவது ஒரு சிறு தொழிலை ஓய்வு நேரத்தில் செய்; அதை விற்றுக் காசாக்கி இடுப்பில் முடிந்து கொள்' என்றார் அவர்.

– திருமதி. ஸாராஜோசப் –

அமெரிக்க மாத இதழ்களில், உலகில் கீர்த்தியும் மேதைமையும் மிக்க பல ஆசிரியர்கள் இருந்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு எந்த முன்னோடியும் கிடையாது. ஆனால் அவர்களே இன்று பத்திரிகை உலகத்துக்கு முன்னோடியாக விளங்குகின்றார்கள்.

அவர்களில் குறிப்பிடத்தக்கவர் ''ஸாராஜோசப்பாஷேல்'' என்கிற பெண்மணி. நாற்பது வயதில் ஆசிரியராக வெளிப்பட்டவர் இவர். கணவனை இழந்து குழந்தைகளைக் காக்க அவளுக்குத் தெரிந்த ஒரே வழி பேனா பிடிப்பதாகவே இருந்தது. நியூ ஷேம்யஸ்பியரைச் சேர்ந்த அந்தப் பெண்மணியே அமெரிக்க மாத இதழ் ஆசிரியர்கள் வரிசையில் முன்னணியில் நிற்பவள்.

ஐந்து குழந்தைகள், இவருக்கு காச நோய் ஏற்பட்டு ஒருமுறை சாகக்கிடந்தார். கணவர் ஷேல் சொத்து, சுகம் அத்தனையையும் விற்றுத் திராட்சைப் பழங்களாகவே வாங்கிக் குவித்துக் கொடுத்துத் தம் மனைவியின் உயிரை மீட்டார்.

அவர் உடல் நலம் தேறினார். ஆனால் கணவன் அதே காச நோய்க்குப் பலியாகிவிட்டார். மக்களைக் காக்க அவர் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1828 ஆம் ஆண்டில் "சின்னஞ்சிறு லேடீஸ் மகஸி"னுக்கு ஆசிரியையானார். அமெரிக்க ஆண்களுடன் அவர்களுடைய இல்லக்கிழத்திகள் சார்பாகப் போர் தொடுக்கிற இதழாகவே அது எடுத்த எடுப்பில் தோன்றியதாக உலகிற்குச் சொல்லப்பட்டது.

பெண்கள் சம்பாதிப்பதை ஆண்கள் பிடுங்கிக் கொள்ளக் கூடாது என்று பெரிய கிளர்ச்சியைச் செய்தார். 'வீட்டு வேலைகளில் ஆண்களும் பகிர்ந்து கொண்டு செய்ய வேண்டும். ஆண்கள் மட்டும் என்ன உசத்தி'? என்று அமெரிக்க ஆண்களைக் கண்டித்தார். சம உரிமை கேட்டார்.

'பெண்களின் சமையலறையே அவர்களுக்கு ஆரோக்கியக் கேடாக இருக்கிறது' என்று சொல்லி, இனிமேல் வசதியாகக் கட்டுவதற்காக வீடுகளின் மொடலைப் போட்டுக் காட்டினார். அப்படி வீடு கட்டிக் கொடுக்கும் படி கணவன்மார்களை வற்புறுத்தினார். தானே கட்டிக் கொடுக்கவும் முன் வந்தார்.

கீர்த்தி மிக்க ஒரு நினைவுச் சின்னம் அரைகுறையாக நின்றது. ஸாரா ஜோசப்ஷேல் அதை ஒரு சவாலாக ஏற்று, அமெரிக்கப் பெண்களிடம் ஏதாவது ஒரு பொருளைச் செய்துதரச் சொல்லி, அவற்றைக் கண்காட்சியாக வைத்து விற்று, காசாக்கி பெரிய நிதியாக்கி அதைக் கொண்டு அந்த நினைவுச் சின்னத்தையே கட்டி முடித்தார்.

அமெரிக்கப் பெண்களுக்கு இவர் உற்ற தோழியாக விளங்கினார். அவர்களுக்கு நலனையே செய்தார். அவர்களுக்காக வாதாடி ஒரு பல்கலைக்கழகமே திறக்கச் செய்தார்.

ஆண்களுக்கு மட்டுமே அன்று வியாபார ஸ்தலங்களில் வேலை தரப்பட்டு வந்தது. "பெண்கள் என்ன மட்டமா? அவர்களால் ஆண்களைவிடச் சிறப்பாக விற்பனை செய்ய முடியும் என்று டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களில் பெண்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுமாறு செய்தார்.

பெண்மணிகளை வேலைக்கு வைத்துக்கொண்டவர்கள் விரைவிலேயே தங்கள் வியாபாரம் மேலோங்கி விளங்கியதைக் கண்டார்கள்.

ஸாரா ஷேல், அமெரிக்க பெண்களைச் சமூகத் தளையிலிருந்து விடுவித்து தலைநிமிரச் செய்தார். சமூகத்தில் சம அந்தஸ்து பெற்றார்கள் பெண்கள், ஸாராவின் முயற்சியால் அதற்கான சட்டங்கள் பிறந்தன. பெண்களை இவர் டாக்டருக்குப் படிக்கச் சொன்னார். அதை ஆண்கள் எதிர்த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் எதிர்க்கிறீர்கள்? உங்களால் பெண்களைச் சகித்துக் கொள்ள முடியாது என்றால் மருத்துவத் துறையை விட்டு வெளியேறுங்கள். பெண்கள் உங்களைவிடச் சிறப்பாகப் பார்த்துக் கொள்வார்கள்'' என்று தன் பத்திரிகையில் கர்ச்சித்தார் ஸாரா ஷேல்.

''மேரி ஷாட் ஏலிட்டில் லாம்ப்'' என்ற பிரசித்தி பெற்ற அழகிய பாடல் நினைவில் இருக்கிறதா? அதை எழுதிய பெண்மணிதான் இந்த ஆசிரியை.

அவர் வீட்டிலிருந்தே எழுதி வந்தார். ''வீட்டிலிருந்தே தான் நான் பத்திரிகையை எடிட் செய்வேன்'' என்று சொன்னார் அவர். பிறகு 'கூடீஸ், லேடீஸ் புக்' என்கிற பெண்கள் இதழில் ஆசிரியர் பதவியை எடுத்துக் கொண்டார்.

கூடீஸ் அதற்குச் சம்மதித்தார். கூடீஸ், லேடீஸ், புக் என்ற பத்திரிகையை நிகரற்றதாகவே செய்துவிட்டார் ஸாரா ஷேல். அதிலே அவர் ஒரு பொருளை நல்லது என்று எழுதினால்தான் பெண்கள் அதை வாங்குவார்கள் என்கிற அளவுக்கு அது அமெரிக்கப் பெண் குலத்திடம் செல்வாக்குப் பெற்றது.

அவரும் கண்ட கண்ட பொருள்களைத் தன் வாசகர்களுக்குச் சிபாரிசு செய்வதில்லை. தானே உபயோகித்துப் பார்த்துத் தீதற்றது என்று கண்டால் தான் பத்திரிகையில் சிபாரிசு செய்வார்.

நல்ல குடும்பப் பெண்மணிகளாக அமெரிக்கப் பெண்களை அவர் உருவாக்கினார், அதே சமயம் தீரமிக்க எந்தச் சவாலையும் ஏற்கக்கூடியவர்களாகவும் செய்தார். தினசரி ஸாராவிடம் ஆலோசனை கேட்டு ஏராளமான பெண்கள் எழுதினார்கள்.

1877 வரை, அவர் தொண்ணூறு வயது வரை வாழ்ந்தார். இரண்டு தலைமுறை பெண்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். ''என்பணி முடிந்தது; எனக்கு அழைப்பு வந்து விட்டது. நான் சொன்னதை எல்லாம் மறந்து விடாதீர்கள்; போய் வருகிறேன். வணக்கம்'' என்று கடைசியாகத் தன் இலட்சக்கணக்கான சகோதரிகளிடம் எழுதி விடை பெற்றுக் கொண்டார். அதன்பின் அவர் வெகு காலம் உயிர் வாழ்ந்து இருக்கவில்லை.

அமெரிக்கப் பெண்கள் இதழின் முன்னோடி அவள்தான். அமெரிக்க குழந்தைகளுக்காக அவர் எழுதின கவிதைகள் சாகா வரம் பெற்றவை.

நன்றி – கலைமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மக்கட் குழுவில் உலக சுகாதார அமைப்பின் அறிக்கை நிலைமைகள் சாதாரணமாக இருந்தாலும் கூட பெண்களுக்கு மனநோய்ச் சிக்கல்கள் ஏற்படலாம். காரணம் பெண்கள் ஆண்களை விட சிக்கல்களுக்கு அல்லது நெருக்கடிகளுக்கு வேறுபாடான முறையில் முகம் கொடுப்பதாலும் மக்கள் குழுவில் பெண்கள், மனைவியாகவும், தாயாகவும், மகளாகவும் தொழில்புரிபவர்களாகவும், பிள்ளைகளைப் பெற்றும், வளர்த்தும் கண்காணிப்பவர்களாகவும் பல நெருக்கடி நிலைமைகளுக்கு ஆளாகிறார்கள்.*

## மன நோய் சுகாதார பிரச்சினைகள்

## ஆண்களைவிட பெண்களே கூடுதலான பாதிப்படைகின்றார்கள்

01. உலக சுகாதார அமைப்பின் "பெண்களின் உளவியல் மனோநிலை சுகாதாரம்" என்னும் புதிய ஆவணத்தில் குறிப்பிட்டபடி பெண்களே ஆண்களைவிட மனோநிலை சுகாதார சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள் என்று கூறுகிறது. அடுத்து உலக சுகாதார அமைப்பும், அவுஸ்திரேலியாவின் மெல்போர்ணில் உள்ள சுகாதார அமைப்புக்களும் சேர்ந்து "பெண்களும் சுகாதாரமும்" என்ற தலைப்பில் தயாரித்த அறிக்கையில் "மனோவியல் சுகாதாரம் பெண்கள் முக்கிய சுகாதாரப் பிரச்சினையாக

கணிக்கப் பட்டுள்ளது" எனக் கூறப்பட்டுள்ளது. அடுத்தபடி பெண்கள் மக்களாய பொருண்மிய வேறுபாடுகள் காரணமாக பல நெருக்கடிகளை சமாளிக்க வேண்டி இருப்பதாலும் மனோவியல் சுகயீனங்களுக்கு ஆளாக நேரிடுகிறது எனவும் கூறுகிறது.

02. ஆண்களை விட பெண்களே கூடுதலாக உளவியல் சுகாதார உதவிகளை பெற வாய்ப்பு உள்ளவர்களாக இருந்தும் பெண்கள் தான் உளவியல் சுகாதார சிக்கல்களால் கூடியளவு பாதிப்படைகிறார்கள். அதற்குப் பெண்களின் உடல்நிலை அல்ல அவர்களின் சமூக கடமைகள் தான் காரணமாகும்.

கூடுதலாக மனமுறிவுகள், அல்லது தனித்தன்மை, சக்தியற்ற நிலைமை, மற்றும் வறுமை காரணங்களால் மனோநிலை பாதிப்பு ஏற்படுகின்றது. ஆண்களைவிட பெண்களே இவற்றை அதிகமாக அனுபவிப்பதால் அவர்கள் மனோநிலைப் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

## நெருக்கடி நிலைக்கு ஆளாகும் அபாயம்.

03. சாதாரண நிலையிலும் கூட பெண்களுக்கு மனோநிலை பாதிப்புஏற்படலாம். ஏனெனில் ஆண்களிலும் பார்க்க வேறுபட்ட நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பெண்கள் சமுதாயத்தில் தாயாகவும், மகளாகவும், மனைவியாகவும் தொழிலாளியாகவும், பிள்ளையைப் பெற்று வளர்ப்பவளாகவும், பல தரப்பட்ட பொறுப்புக்களில் ஈடுபட்டு நெருக்கடிகளையும், பாரிய பொறுப்புக்களையும் தாங்கும் சக்தியாக விளங்குகிறார்கள்.

"இன்றைய சமுதாய அமைப்பின் விளைவாக பெண்கள் பதற்றத்துக்கும் நெருக்கடி நிலைகளுக்கும் ஆளாகிறார்கள்." என அறிக்கை கூறுகின்றது.

04. உணவு காரணமாக பாதிப்பு அடைபவர்கள் 90 இற்கு கூடுதலாகப் பெண்களாகும். பொதுவாக உடல் நிலை எல்லாப் பெண்களுக்கும் ஒரே விதமாக அமைவது கடினம். அத்துடன் ஆண்களின் நிலையைக் கொண்டு பெண்களின் உளவியல் விடயங்களைக் மதிப்பீடு செய்வதும் தவறாகும் என அறிக்கை கூறுகின்றது.

05. அதிக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெண்கள் மனோவியல் தாக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் பாதிப்படைவதற்கு தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். இத்தாக்கங்கள் விவாகமான பெண்களிலும், அதிக பிள்ளைகளைப் பெறும் பெண்களிலும் கூடியளவு காணப்படுகின்றது.

06. வீட்டுக்கு வெளியே வேலை செய்யும் ஒரு பெண் வேறு உதவியின்றி தனது குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்புள்ளவராக இருந்தாலும் அவளது உள நிலை பாதிப்படைவது அதிகரிக்கின்றது. ஆனால் குழந்தையைப் பராமரிக்க உதவியாள் இருந்தாலும் அவளது கணவர் பங்கு கொண்டாலும் வேலை செய்யும் பெண்களின் உள நிலைப் பாதிப்புக் குறைவடைகின்றது என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

07. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெண்கள் கூடுதலாக வேலைகளுக்கு சென்றாலும், வீட்டு வேலைகளில் முக்கியமான மாற்றங்கள் ஏதும் இல்லை என அவ்வறிக்கை தெரிவிக்கின்றது. வேலை செய்யும் பெண்கள் மூன்று மணி நேரம் வீட்டு வேலைகளிலும் 50 நிமிடங்கள் பிள்ளைகளுடனும் செலவிடுகின்றார்கள். ஆண்கள் 17 நிமிடங்கள் வீட்டு வேலைகளிலும் 12 நிமிடங்களே பிள்ளைகளுடனும் செலவிடுகின்றார்கள். அதே வேளை வேலை செய்யும் ஆண்கள் மனைவியை விட ஒரு மணித்தியாலம் கூடுதலாக தொலைக்காட்சி பார்ப்பார்கள். அத்துடன் நித்திரையிலும் ½ மணித்தியாலம் கூடுதலாகவும் உணவு உட்கொள்ளுவதற்கும் கூடுதலான நேரத்தை செலவிடுகின்றார்கள்.

08. வறுமைக்கும், குறைந்த வாழ்க்கைத் தரத்துக்கும் மனோநிலைச் சிக்கல்களுடன் தொடர்புண்டு. குறைந்த வருமானமுடைய தனிப் பெற்றோராக இருப்பின் அவர்கள் மன விரக்திக்குள்ளாகி மனத் தாழ்வு ஏற்படக்கூடியவர்களாகுவார்கள். துன்பத்தினுள்ளவர்களுக்கு ஆதரவாக இருப்பது சமுதாய இணைப்புத் திட்டங்களானாலும் அதேவேளை அந்த ஏழைப் பெண்ணும் அல்லது உறவினரும், சிநேகிதரும் கூட அதே நிலையில் இருந்தால் அது தொடர்ச்சியான நெருக்கடி நிலையையேஉருவாக்கும்.

09. மணமான பின் ஏற்படும் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகம் போன்ற, பிரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினைகளால் பெண்ணின் மனோநிலை பாதிப்பு அடையலாம். ஐக்கிய அமெரிக்காவிலுள்ள அரைவாசிக் குடும்பங்களில் வன்முறைகள் காணப்படுவதோடு ஆண்டொன்றுக்கு 20 லட்சம் மனைவிமார் உருக்குலைந்து சீரழிந்து காணப்படுகின்றார்கள். ஆண்களின் இம்சை காரணமாக பெண்கள் அதிர்ச்சிக்கும் உள்ளாகி மனோநிலை பாதிக்கப்பட்டு உதவி அற்று நிற்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

குடும்ப அங்கத்தவர்களினாலேயே 10க்கு 9வீத பாலியல் வன்முறைகளும், உடல்தாக்கங்களும் ஏற்படுவதாக மனோவியல் நோயாளர் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

10. பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் பதற்றத்தினால் தாக்கம் அடைந்தவர்களாகவும். முழு உடம்பு பாதிக்கப்பட்டவர்களாகவும், சித்தப்பிரமையுடையவர்களாவும் காட்சி அளிக்கிறார்கள். வாழ்நாளில் ஆறு பெண்களுக்கு ஒருவர் வீதம் கற்பு அழிக்கப்பட்டதாக காணப்படுகிறார்கள் என அவ்வறிக்கை கூறுகின்றது.

இளம் பிராயத்தில் ஆண்களைவிட அதிகமாக பெண்களே பிழையான அல்லது தவறான நடத்தையில் ஈடுபடுகிறார்கள். 1/5 பங்கு வழிதவறிய பிள்ளைகள் பாரிய உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகிக் காணப்படுகின்றனர். பாலியல் முறையில் தவறிவிட்ட பெண்பிள்ளைகள் மற்றப் பிள்ளைகளை விட மும்மடங்கு பாதிப்பு அடைந்தவர்களாக காணப்படுகின்றார்கள். உடல்ரீதியாக தங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய மனோநிலையில் காணப்படுகின்றார்கள். அவர்கள் வயது வந்தபின் கூடியளவு பாலியல் பிரச்சினைக்கும், போதைவஸ்து பாவனைக்கும் ஆளாகின்றார்கள். உலக சுகாதார அமைப்பின் அறிக்கைப்படி தவறிவிட்ட பெண்கள் விரக்தியின் விளிம்புக்குச் சென்றவர்களாகவும், பதற்றமுடையவர்களாகவும் உள்ளார்கள். இது முழுக்க முழுக்க விளங்க கூடியதும் யதார்த்த நிலையும் ஆகும்.

11. பெற்றோர் ஆகும் நிலையை அடையும் போது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு நெருக்கடி நிலையை ஏற்படுத்துகின்றது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரிக்கும் பொழுது ஒரு பெண்ணுக்கு மேலும் நெருக்கடி ஏற்படுகின்றது. கருச்சிதைவு, உரிய காலத்துக்கு முன் பிள்ளை பிறப்பது, சாவடைந்து பிறப்பது போன்றவற்றால் ஒரு பெண்ணின் மனோநிலை அல்லது உணர்ச்சி பல ஆண்டுகளுக்குப் பாதிப்படைகின்றது. தாய்மையடையும் போது ஒரு பெண்ணின் வாழ்வில் முக்கிய மாற்றங்கள் ஏற்படுகின்றது. "பிள்ளை பிறந்து 12 மாதங்கள் வரை உளரீதியான தாக்கங்களால் தாய் துன்பப்பட நேரிடுகின்றது என அவ்வறிக்கை கூறுகின்றது. முந்திய இரு ஆண்டுகளை விட பிள்ளைபிறந்து ஒரு மாதத்திற்குள் பெண்கள் மனநோய் காரணமாக ஆண்களை விட 22 முறை மனநோய் ஆஸ்பத்திரிக்கு செல்வதைக் காணக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றது என ஆய்வு தெரிவிக்கின்றது.

12. குழந்தை பிறந்த பின் பாதிப்புக்கள் எனக் கூறும் உலக சுகாதார அமைப்பு குழந்தை பிறந்த பின் பாதிப்பை தவிர்ப்பதற்கு சமூக அமைப்புக்கள் முன் வந்து வழிகாட்ட வேண்டும் எனக் கோரியுள்ளது. ஆறு முதல் ஒன்பது மாதம் வரை 10 குழந்தைகளில் ஒரு குழந்தை உருத்தாக்கத்துக்குள்ளான தாயாரினாலேயே கவனித்துவரப் படுகின்றது.

13. வாழ்க்கையின் முதிர்ச்சியிலும் கூட பெண்கள் மீண்டும் மன நிலைபாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். பெண்கள் ஆண்களைவிட கூடிய காலத்துக்கு சீவிக்கின்றார்கள். முன்னேறியுள்ள உலகில் கூடிய தொகையினரான பெண்கள் எழுபத்தைந்து வயதில் விதவையாகித் தனித்து வாழ்கின்றார்கள். எண்பத்தைந்து வயதுக்கு மேலாக வாழ்ந்து வரும் மக்களில் 25 வீதமானோர் குணப்படுத்த முடியாத நோய்க்கு ஆளாகின்றார்கள். அவர்களில் பெண்களே அதிகமானவர்கள்.

14. "அதிகமான பெண்களின் சுகாதாரம் நேரத்துக்கு நேரம் நிவிர்த்தி அடைகின்றது என ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் நெருக்கடி நிலையை உருவாக்கும் சுகாதாரப் பிரச்சினைகள் கூடுதலான பெண்களை கடுமையாக பாதிப்பதில்லை என்பது ஆச்சரியத்திற்குரியது." என அந்த அறிக்கை முடிவடைகின்றது. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிறேற்றர் அன்ரிலிஸ்

1 கியூபா
2 ஹெயிட்டி
3 டொமினிக்க குடியரசு
4 போட்டோறிக்கோ
5 ஜமேய்க்கா

## லெசர் அன்ரிலிஸ்

6 அன்ரிகுவா
7 பார்பியூடா
8 டொமினிக்கா
9 சென் லூசியா
10 பார்படோஸ்
11 கிரனடா
12 சென் வின்சென்ற்
13 ரினிடாட், ரொபாகோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரிபியப் பிரதேச பெண்கள் அமைப்புகள்

- குந்தவை -

## அறிமுகம்

□

கரிபியப் பிரதேசம் என அழைக்கப்படும் பகுதி, வட தென் அமெரிக்க கண்டங்களுக்கிடையில் கிழக்கே அத்திலாந்திக் சமுத்திரத்தையும் மேற்கே மெக்ஸிக்கோ வளைகுடாவையும் எல்லையாக கொண்டு அமைந்துள்ளது. மேற்கிந்திய தீவுகள் என்று கொலம்பஸ்ஸினால் பெயரிடப்பட்ட 1200க்கும் மேற்பட்ட தீவுகள் இப்பிரதேசத்தில் அமைந்துள்ளன. கியூபா, ஜமேய்க்கா, கெயிட்டி டொமினிக்கக் குடியரசு ( Hispaniola ) போட்டோறிக்கோ முதலிய தீவுகளைக் கொண்ட கிறேற்றர் அன்ரிலீஸ் ( Greater Antilles ) என அழைக்கப்படும் பிரதேசம் அன்ரிகுவா, பார்பியூடா, டொமினிக்கா, பார்படோஸ் பெலிஸ், கயானா, சென். லூசியா, சென். வின்சென்ற், சென். கிறிஸ்தோபர், நெவிஸ்ரினிடாட், ரொபாகோ, கிரனடா போன்ற சிறியதீவுகள் உள்ளடக்கிய லெசர் அன்ரிலிஸ் ( Lesser Antilles ) என அழைக்கப்படும் பிரதேச, பகாமாத் தீவுகள் என மூன்று பிரதான தீவுக் கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் கரிபியப் பிரதேசத்தில் ஆங்கிலம், பிரெஞ்சு ஸ்பானிஸ் போன்ற மொழிகள் அதிகளவில் பேசப்படும் மொழிகளாக உள்ளன. ஆங்கிலத்தைப் பேசும்மொழியாகக் கொண்ட ஜமேய்க்கா, லெசர் அன்ரிலிஸ் எனப்படும் பிரதேசத்தில் அமைந்துள்ள அநேக நாடுகளில் 19ஆம் நூற்றாண்டில் இருந்து தோற்றம் பெற்றபெண் இயக்கங்கள் அவற்றின் செயற்பாடுகள் பற்றிய வரலாற்றுப் பார்வையை இக்கட்டுரை தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் பின்னணி : -

ஆங்கிலத்தைப் பேசும்மொழியாகக் கொண்ட கரிபியப் பிரதேசத்தில் உள்ள பெண்கள் 19 ஆம் நூற்றாண்டு தொட்டே பெண்கள் அமைப்புகளில் அங்கத்தவர்களாக இருந்து வந்திருக்கின்றார்கள். கரிபியப் பிரதேச மக்களின் வரலாற்று மூலத்தை நோக்கும் போது அடிமை அமைப்பினூடாக கட்டாய கூலியாக இடம் பெயர்ந்த ஆபிரிக்கப் பெண்களும், தனிப்பட்ட ஆண்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற்று வாழும் நோக்குடன் எவ்வித திட்டமுமின்றி சட்டபூர்வ ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளராக வந்த இந்தியப் பெண்களுமே கரிபியப் பெண்களாவர்.

கரிபியப் பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் இருந்த பெண்கள் அமைப்புகள் மத அடிப்படையிலான பெண்களின் அமைப்புகளாக, குறிப்பாக கிறிஸ்தவ தேவாலயங்களினுடைய பலதரப்பட்ட பிரிவுகளாக இயங்கின. இப்பிரதேசத்தில் பெண்களுக்கான ஒழுங்கமைப்பு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மிகமுக்கியமாக கருதப்பட்டமைக்கு பெண்கள் அமைப்பானது பெண்களுக்கு கொடுக்கப்படும் இடம், பால் அடிப்படையிலான தொழிற்பிரிவு, சமூக உள்ளூர் நிறுவனங்கள் போன்ற மேற்கு ஐரோப்பிய பண்புகளை இடமாற்றம் செய்வதற்கும் மனத்தில் அழுந்தப் பதியவைப்பதற்குமான பிரதான பொறி நுட்பமாகக் கருதப்பட்டமையே முக்கிய காரணமாகும். பெண்களுக்கான பெரியளவிலான அமைப்புகள் மத அமைப்புகளுக்குள்ளேயே தொடர்ந்து இயங்கின. இவ்வாறு இயங்குவது ஒரு புறம் எவ்வித விசாரணையுமின்றி அல்லது நியாயப்படுத்த வேண்டிய தேவையுமின்றி வீட்டிற்கு வெளியே பெண்கள் சுதந்திரமாக பங்குபற்றுவதற்குரிய வசதி அளித்து அதே சமயம் மறுபுறத்தில் கடின உழைப்பு, சமூக பொருளாதார, பௌதிக அல்லது உணர்ச்சி பூர்வ தாக்கங்களை நாளாந்த ஒழுங்கு முறையாகக் கொண்ட ஒரு உலக சமூகத்திற்கு ஆன்மீக திருப்தியை வழங்கக் கூடிய தொன்றாகவும் இது இருந்தது.

பெண்கள் அமைப்பினது மிகப் பெரியளவிலான அசைவியக்கமானது தொழிலாளர் இயக்கத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 களின் பிற்பகுதியிலும் 70களின் முற்பகுதியிலும் சர்வதேசரீதியில் பெண்கள் இயக்கத்தின் மீள் தோற்றமானது கரிபியப் பெண்கள் போராட்டத்திலும் ஒரு புதிய யுகத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது. ஆரம்பகால பெண் இயக்கங்கள் போலன்றி இவ் விளைவானது மிகப் பரந்த தொன்றாக தனிப்பட்ட, அரசியல் வாழ்க்கையின் பலதரப்பட்ட அம்சங்களை தொட்டு நிற்பதொன்றாக இருந்திருக்கின்றது.

னூடாகவும் அரசியல் அமைப்புகளுக் கூடாகவும் கூட இடம் பெற்றது. கரிபியப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கு ஏதுவாக இருந்த ஆரம்பகால தொழிலாளர் இயக்கமானது இன்றைய தொழிற்சங்கங்கள் போலன்றி ஒழுங்கற்ற ஒரு இயக்கமாகவே இருந்தது. பெண்களின் ஆதிக்கம் அதிகளவில் காணப்படும் தொழில்களில் பெண்கள் தொடர்ந்தும் சங்க அங்கத்தவர்களாக இருந்த பொழுதிலும் கூட இவ்வாறான சங்கங்களின் மிகக்குறைவினரே சங்கத் தலைமையை ஏற்பவராக இருந்தனர். இன்றுங்கூட தலைமையில் மட்டுமன்றி செயற்பாடுகளின் தன்மையிலும் கூட தொழிற் சங்க இயக்கமானது ஆணாதிக்க அமைப்பாகவே தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

1950 களில் இருந்த மரபு ரீதியான பெண்கள் அமைப்புகளில் அங்கத்தவர்களாக இருந்த துணிவும் தைரியமுமிக்க பெண்களே முதல்தரப் பெண்களாக செல்வாக்கு பெற்றனர். இவர்களிற் பலர் அக்காலத்தில் தோற்றம் பெற்ற தேசியவாத அரசியற் கட்சிகளுடன் கூடுதலானளவிற்கு சம்பந்தப்பட்டிருந்தனர். இப்பிரதேசத்தில் மிகக்குறைந்தளவில் தோற்றம் பெற்ற புதிய உணர்வு கூட அரசியல் அமைப்பிற்குள்ளும், சமூகம் முழுவதிலும் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்த பழைய பெண்சக்திகளை ஞாபகமூட்டுவதாகவே இருந்தது.

இதே காலப்பகுதிகளில் சிறியளவிலான பெண்கள் குழுக்கள் பல தமக்குள் ஒன்று கூடி தமது நிலை பற்றி கலந்துரையாடியது டன் அவற்றின் பல தீவிர கறுப்பின சக்தி, போர் எதிர்ப்பு, புதிய இடதுசாரி, வட அமெரிக்க, ஐரோப்பிய பெண்கள் விடுதலை இயக்கங்கள் போன்றவற்றிலிருந்து தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்ற கருத்துக்களின் செல்வாக்குக்குட்பட்டன. இப்புதிய இடதுசாரி அரசியலில் காணப்பட்ட முரண்பாடுகள் இப் பெண்கள் இயக்கங்களிலுள்ள பெரும்பாலான பெண்களினாலும் உணரப்பட்டன.

## பெண்கள் அமைப்புகளும் செயற்பாடுகளும் : -

கரிபியப் பிரதேசத்தில் காலத்துக்குச் காலம் தோற்றம் பெற்ற பல பெண்கள் அமைப்புகளுள் மிகவும் திடமானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான அமைப்பாக கருதப்படுவது கயானாவில் 1953இல் உருவாக்கப்பட்ட பெண்கள் முன்னேற்ற அமைப்பாகும். ( Wpo ) இப்பிரதேசத்தில் பெண்கள் போராட்டமானது ஆரம்பத்தில் அடிமைத்தனத்திற்கெதிரான போராட்டங்களுடனும் பின்பு சுரண்டலுக்கெதிரான போராட்டங்களுடனும் அதன் பின்பு காலனித்துவத்திற்கெதிரான போராட்டங்களுடனும் நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தது. பெண்கள் முன்னேற்ற அமைப்பானது பெண்கள் பிரச்சினை தொடர்பான தனது அணுகுமுறைகளை விரிவுபடுத்தியதுடன் நீதியின்மைக்கு எதிரான போராட்டத்தில் பெண்களையும் பங்கு கொள்ளச் செய்யும் முயற்சியில் முன்னின்றது. அமைப்பு ரீதியாகவும் உருவ ரீதியாகவும் இவ் அமைப்பானது ஆரம்பத்தில் ஒரு குழுவாக இருந்து பின்பு முழு நிறுவனமாக வளர்ச்சியடைந்ததுடன் பல குழுக்களையும், பிரதேசரீதியான கிளைகளையும் தன்னுள் கொண்டிருந்தது. இவ்வமைப்பானது சிறுவர்நலன், பெண் கல்வி, பெண் சமத்துவம் போன்றவற்றிற்கான போராட்டத்தில் முனைப்புடன் செயற்பட்டு வெற்றியும் கண்டு வருகின்றது. போசாக்குப் பற்றாக்குறையின் அதிகரிப்புப் பற்றியும் சிறுவர் சனத்தொகையில் அதன் தாக்கம் பற்றியும் ஆய்வு செய்து அது தொடர்பான புள்ளி விபரங்களையும் ஆவணங்களையும் வெளியிட்டதுடன் கயானா சிறுவர்களுக்கு குறைந்த விலையில் பால் உபயோகம், ஏனைய போசாக்கு உணவுகள் போன்றவற்றிற்காக போராடிய முதல் அமைப்பு இதுவாகும்.

பெற்றோர் தமது பெண் பிள்ளைகளுக்கு கல்வியூட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தி அதற்காக வாதாடி ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் கல்வி என படிப்படியாக பெண் கல்வி வளர்ச்சிக்கும் இவ் அமைப்பு வித்திட்டது. பெண்கள் தம்மைப்பற்றி தாமே கொண்டிருக்கும் மனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண் சமத்துவத்திற்கான போராட்டத்தில் முதலாவது தேவை பெண்களுக்கு தொழிலும் கல்வியும் தான் எனபதை வலியுறுத்தி கலவியும பயிற்சியுமின்றி முதல்தர தொழில் வாய்ப்புகளில் சமத்துவத்தை அடைய முடியாது என இவ் அமைப்பு வலியுறுத்தியது.**

பாவத்தை மாற்றுவதற்கான தேவை, அவர்களுக்குள்ளே மறைந்திருக்கும் உயர் தகைமை களை உணரவைப்பதற்கு உதவு தல், வெறுமனே தாயாகவும், மனைவியாகவும் மட்டுமன்றி சமூகத்தில் ஒரு மனிதப் பிறவி யாகவும் வாழ விரும்பும் உரி மையை சமூகம் ஏறறுக்கொள் ளச் செய்தல் போன்றவற்றை ஊக்குவிக்கும் செயல்பாடுகளில் இவ்வமைபபு முன்னின்று உழைத் தது. அதே போன்று பெண்கள் தொடர்பான ஆண்களின் மனோ பாவத்தில் மாற்றத்திற்கான அவசியத்தையும் பெணகளின் தேவைகளை புரிந்து கொள் வதற்கான அவசியத்தையும் இவ் அமைப்பு வலியுறுத்தி நிற்கிறது.

1970 களின் முற்பகுதியில் கரி பியப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற சிறியளவிலான பெண்கள் அமைப்புகளுள் கருச்சிதைவுச் சட்டங்களை நீக்குவதற்கான ஜமேய்க்கா அமைப்பு, ரினிடாட் டில் உள்ள பெண்கள் உரிமைப் பாதுகாப்பு குழு, கயானா விலுள்ள பயங்கரவாதத்திற்கெதி ரான பெண்கள் குழு போன் றவை முக்கியமானவை. இச்சிறிய குழுக்கள் இடதுசாரி அரசியற் கட்சிகளில் அங்கம்வகித்த பல மத்திய தர அந்தஸ்துள்ள பெண் களை தம்முடன் இணைத்துக் கொண்டன. ரினிடாட், ரொபா கோவில் தோற்றம் பெற்ற ஆரம்ப காலப் பெண்கள் குழு 1975இல் உருவாக்கப்பட்ட வீட்டு மனைவியருக்கான அமைப்பு என் பதாகும். தேசிய அளவில் பெண் கள் மத்தியில் கூட்டுச் செயற் பாடுகளை மேம்படுத்தும் நோக் குடன் அது தொடர்பான கருத் துக்களினதும் தகவல்களினதும் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் முயற்சி இதனது பிரதான கொள் கைகளில் ஒன்றாக இருந்தது. இதனது குறுகியகால வாழ்வில் இக்குழுவானது தேசிய அளவில் அங்கத்துவத்தை திரட்டியது டன் உள்ளூர் பணியாட்களின் வேலை நிலைமைகள் பற்றிய ஆய்வு ஒன்றையும் வெளியிட் டது.

ஏனைய அமைப்புகள் போலன்றி உழைக்கும் வர்க்க அங்கத்தவர் களை கூடுதலாகக் கொண்ட இவ்வமைப்பானது இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தை பெண்ணியம் உணர்வைத் தூண்டுவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தியது. இக்காலப் பகுதியிலேயே கிரனடாவில் உருவாக்கப்பட்ட நியூ யுவல் இயக்கத்தின் (NewJewel Movement) தேசிய பெண்கள் அமைப்பு புரட்சிகர செயற்பாடுகளில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கியதுடன் மக்கள் புரட்சியிலும் முன்னின்றது. 1980 இல் இது கிரனடாப் பெண்களுக்கான மிகப் பெரிய அமைப்பாக விருத்தி செய்யப்பட்டது. 1980 களின் பிற்பகுதியில் இவ்வமைப்பானது 1000 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டிருந்ததுடன் 1981 ஆம் ஆண்டளவில் 100 புதிய கிளைகளை கிராமங்களிலும் சமூகங்களிலும் ஸ்தாபிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டது. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், தமது சொந்த பலத்திலேயே ஒரு நாடு தங்கியிருப்பதற்கும் ஆண்களுக்கு நிகராக பெண்களும் சரிசமமாக பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி பெண்கள் விவகாரத்திற்கான ஒரு அலுவலகத்தையும் இது உருவாக்கியது.

உழைக்கும் பெண்கள் சார்பாக செயல்பட்ட அமைப்புகளுள் ஜமேய்க்காவின் பெண்கள் அபிவிருத்திக்கான குழு ( CWP ) என்ற அமைப்பும், மக்கள் தேசியக் கட்சியின் பெண்கள் முன்னேற்றம் என்ற அமைப்பும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஜமேய்க்காவின் உழைப்புச் சக்தியில் 35% ஐக் கொண்டிருக்கும் ஜமேய்க்கப் பெண்களுக்கு மூன்றுமாதகால சம்பளத்துடன் கூடிய பிரசவ கால விடுப்புக்கான போராட்டத்தை இவ்விரு அமைப்புகளும் இணைந்து தொடங்கியது. 1974ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இவ்விரு அமைப்புகளும் ஒன்றாக இணைந்து 'பெண்கள் உரிமைக்கான இணைப்புக்குழு' ( Joint Committee for Women's right ) என்ற பெயரில் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்தது. உழைக்கும் பெண்களைப் பாதிக்கும் அசமத்துவ வேலை நிபந்தனைகளை அனுபவிக்கும் உழைக்கும் பெண்களை பற்றி ஆய்வு செய்து அவ் ஆய்வு முடிவுகளை பலதரப்பட்ட பொதுக் கூட்டங்களிலும் தனிப்பட்ட உரையாடல் மூலமும் வெளியிட்டது. ஆயிரத்திற்கும் மேலான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததுடன் பிரசவ விடுப்பு தேவைப்படும் எண்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களிடமிருந்து கையெழுத்து சேகரிக்கப்பட்டது. இம் முயற்சியில் இக் குழுவானது பலதரப்பட்ட சமூக சமய நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டதுடன் போராட்டத்திலும் வெற்றியடைந்தது. இவ் வெற்றியின் வெளிப்பாடே ஜமேய்க்காவில் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட பிரசவ லீவுச் சட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 களின் பிற்பகுதியில் பெண்ணியம் சார்பான பெண் இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இவற்றில் முதல் தரத்தில் வைத்து எண்ணப்படக் கூடிய பெண்ணியம் சார்பான நற்சார்புப் பெண்கள் குழுக்களில் ஒன்றான சிஸ்ரன் வுமன் தியேட்டர் கலக்ரிவ் (Sitren Women ' s Theatre Collective) 1977 இல் உருவாக்கப்பட்டது.

1980 களின் சிறிய தீவிரவாத அல்லது பெண்ணியம் சார்பான பெண்கள் குழுக்கள் கரிபியப் பிரதேசம் முழுவதும் தோற்றம் பெற்றன. இவற்றுள் 1979இல் பெலிசில் உருவாக்கப்பட்ட (BOWAND) அமைப்பு 1985இல் ரினிடாட் அராபாகோவில் தோற்றம் பெற்ற அபிவிருத்திக்கான பெண்கள் அமைப்பு (Women for progress) 1984 இல் சென் வின்சென்றில் உருவாகிய பெண்கள் அபிவிருத்திக்கான குழு ( Commitee for the development of Women ) 1985 இல் உருவாகிய பெலிஸ் கிராமிய பெண்கள் அமைப்பு (Rural Women Association) சென் கிறிஸ்ரோபர் நெவிஸில் உள்ள (Sisinidada) என்ற அமைப்பு 1986 இல் தோற்றம் பெற்ற கயானாவின் செந்நிற நூல் (Red Thrend) என்னும் அமைப்பு 1988 இல் உருவாகிய பார்படோஸ் பெண்கள் மன்றம் என்பவற்றை பிரதானமாகக் குறிப்பிடலாம். மிகக் குறைந்தளவிலான அங்கத்துவத்தைக் கொண்டிருந்த இவ் அமைப்புகள் பிரசித்தக்கல்வி, வருவாய் தோற்றுவிக்கும் செயற்திட்டங்கள், ஒளிப்படங்கள், செய்திக் கடிதங்கள், திரைப்படங்கள், பொருட்காட்சிகள் போன்றவற்றினூடாக உள்ளார்ந்த ரீதியிலும் பரந்தளவில் பொது மக்களுக்கும் உணர்வைத் தூண்டும் செயல்பாடுகளில் ஒருமித்து உழைத்தன.


அளவில் சிறியதாகவும் இலவச அங்கத்துவத்தைக் கொண்டதாகவும் இருந்தபோதிலும் இவ் அமைப்புகளின் செயற்பாடுகளின் விளைவானது மிகவும் பெரிதாகவே காணப்பட்டது. மரபுரீதியான பெண்கள் அமைப்புகளிலுள்ள பெண்கள் உட்பட பெண்களின் பரந்தளவிலான அடிப்படை அம்சங்களுடன் இணைந்து காணப்படுகின்ற ஒன்றுக்கொன்று தொடர்பான பிரச்சினைகளை ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளினூடாக பெற்றுக் கொள்ளும் அளவிற்கு இச் சிறுகுழுக்கள் செல்வாக்குள்ளவையாகக் காணப்பட்டன. 1985 - 86 காலப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் செண் வின்சென்ற் கிரனடின் பகுதியில் பெண்களுக்கெதிரான வன்முறையை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அதே காலப்பகுதியில் ரினிடாட் ரொபாகோவில் இடம்பெற்ற பாலியல் சட்டமூலத்திற்கெதிரான நடவடிக்கை என்பன இவற்றில் பிரசித்தி பெற்றவை.

பாலியல் வன்முறைப் பிரச்சினையானது பிரதேசம் முழுவதிலும் உள்ள பெண்களை ஒன்று திரட்டும் பிரதான காரணியாகத் திகழ்ந்தது. உள்ளூர் ரீதியான வன்முறை சிறுவர்களை பாலியல் நோக்கத்திற்காக தவறாகப் பயன்படுத்தல், சங்கங்களில் பெண்களை கற்பழித்தல், பெண்ளைக் கொடுமைப்படுத்தல், கற்பழித்தல், தகாத உறவு, வேலைத்தலங்களில் பாலியல் சித்திரவதை, ஏனைய வடிவங்களிலான பாலியல் வன்முறைகள் என்புவற்றை உள்ளடக்கிய பிரச்சினையானது இன வகுப்பு பேதமின்றி பெண்களை ஒன்றுதிரட்டும் வாய்ப்பை அளித்து இத்தகைய அபிவிருத்தியானது ஏற்கெனவே நிலைகொண்டிருந்த பெண் அமைப்புகளின் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கும், அவர்களை ஏற்கெனவே செய்து கொண்டிருந்த தர்ம சிந்தனை சார்ந்த பணிகளைக் கைவிட்டு பெண் விடுதலைக்காக உழைப்பதற்குமான உந்து சக்தியையும் அளித்தது. இவ்வகையில் (YWCA) பார்படோஸ் தாய்மார் சங்கம் போன்ற கிறிஸ்தவ அமைப்புகள் பார்படோஸ், ரினிடாட் ரொபாகோவில் உள்ள வியாபார தொழிற்திறன் சார் பெண்கள் கழகங்கள், ஜமேய்க்காவின் (Madawadad8) (தாய் அன்பு) என்ற அமைப்பு ரினிடாட் ரொபோகோவில் இந்து பெண்கள் அமைப்பு என்பன பெண்கள் நலன், இளம் பெண்களும் உலக சமாதானமும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உதவி



ஒருவர்:- அவள் பொடிச்சிகமலம் மூல நட்சத்திரம். நல்ல மூலதனத்தோடை இருக்கிறாள்.

மற்றவர்:- உந்த எதுகை மோனை பார்த்துத்தான் எங்கடை ஆக்கள் அகதிகளாக உலகம் முழுக்க இருக்கினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வமைப்பின் விசேட பண்பு பெண்ணியம் என்ற கருது கோளுடன் மரபு ரீதியாக இணைந்து நின்ற எதிர்மறை எண்ணங்களையும் தவறான அபிப்பிராயங்களையும் எதிர்த்து சவால் விடுவதற்கு தீர்மானித்தமையாகும்.

போன்றவற்றில் முன்னின்று உழைத்தன.

கரிபியப் பிரதேசம் முழுவதையும் இணைத்த வகையில் 1985இல் (CAFRA)என அழைக்கப்படும் பெண்ணியம் ஆய்வு செயற்பாடுகளுக்கான கரிபிய அமைப்பு (Carribean Association for feminist research and Action) உருவாக்கப்பட்டது. இதனை செய்வதற்கு பெண்ணின் கீழ் நிலையானது ஏனைய கீழ்நிலை அமைப்புகளான இன வகுப்பு தேசம் என்பவற்றுடன் இணைத்துப் பார்க்கப்படுவதுடன் அதனையும் தாண்டி மரபுரீதியான எல்லைகளான மொழி கலாச்சாரத்துடனும் இணைக்கும் வகையில் கரிபியப் பெண்ணியத்துக்கு புது வரைவிலக்கணத்தை தோற்றுவித்தது. இன்று (CAFRA) அங்கத்துவமானது டச்சு ஆங்கில பிரெஞ்சு, ஸ்பானிஸ் அமெரிக்க மொழி பேசும் மக்களையும் உள்ளடக்கியுள்ளது.

இவற்றின் செயல்திட்ட நடவடிக்கைகளால் விவசாயத்தில் பெண்கள் பற்றிய ஆராய்ச்சி, பெண்கள் வரலாறு ஆக்கபூர்வ எழுத்து தொடர்பு தகவல், மொழித்தடைகளை நீக்குவதில் உதவுதல், ஆவண பதிவுத் தளங்களை தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் பயன்படுத்துவதற்காக உருவாக்குதல் போன்ற ஆய்வு நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது.

1987 அளவில் கரிபிய விடுதலைக்கான பெண்கள் (Women For Caribean Liberation,) என்ற மற்றுமொரு பிரதேச வலயமைப்பு சென். வின்சென்றில் நிறுவப்பட்டது. அன்ரிகுவாவை தலைமையகமாகக் கொண்டு இப் பிரிவானது அன்ரி குவாவில் கூடிய முதலாவது கரிபியப்பெண்கள் சந்திப்பாகக் கருதப்படும். பொதுவுடமை சார்ந்த அரசியல் அமைப்புகளுடன் இணைந்த வகையிலான பெண்கள் வலயமைப்பாக ஆரம்பத்தில் தோற்றம் பெற்றது. இதுவரைகெயிட்டி பிரதேசத்தின் அபிவிருத்தி சார் தகவல்களை பிரசுரப்படுத்தியதுடன் பெண்கள் பணியிலும் அதன் செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தியுள்ளது.

முடிவுரை:-

இவ் வகையில் நோக்கும் போது 19 ஆம் நூற்றாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்தே கரிபியப் பிரதேசத்தில் மிக அபிவிருத்தியடைந்த பெண்கள் இயக்கங்கள் தோன்றி வளர்ச்சியடைந்திருப்பதை அவதானிக்க முடியும். கரிபியப் பிரதேசத்தில் அமைந்துள்ள தனித் தனி நாடுகளிலும் பின்பு பிரதேசம் முழுவதையும் இணைக்கும் வகையில் வலயவமைப்பு ரீதியாகவும் பெண்கள் இயக்கங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. பெண்களின் தனித்துவ நிலையைப் பேணுவதற்கும் அவர்களின் வாழ்க்கையை கட்டுப்படுத்துவதற்கும் தனித்துவ நிலையை சீரழிக்கும் முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் இணைந்து செயற்படும் நாளாந்த நடவடிக்கைகளிலும் சரி அல்லது பெண் விடுதலையை அல்லது பெண்ணின் கீழான நிலையை மாற்றுவதை இலக்காகக் கொண்டு சில வரையறுக்கப்பட்ட கொள்கைகளை அடைவதற்காக உள்ளன. தேசிய பிராந்திய சர்வதேச பெண் விடுதலை தொடர்பான இவ்விரு அம்சங்களிலும் கரிபியப் பிரதேச பெண் இயக்கங்கள் மிகப் பெரும் பங்களிப்பை தம் பெண்களுக்கு ஆற்றியுள்ளன.


உசாத்துணை நூல்கள்

i. Women Action vol. 2. 1991

ii. Women of the While world [Various Isscces] □


# முயன்றால் முடியாததா?

ᐊᐅᐊᐅᐊᐅᐊᐅ

கட்டாக உடலை வைத்துக் கொள்ள ஆண்களால் தான் முடியுமா? எங்களால் முடியாதா என பெண்கள் பலர் உடல் பயிற்சியில் ஈடுபட்டிருப்பது உண்மை. ஆனால் எண்பத்தி நாலு வயதான ஒரு கொள்ளுப்பாட்டி, இதில் முதன்மையாகத் திகழ்ந்து பரிசும் பெற்றிருக்கிறார் அமெரிக்காவில்! அறுபது வயது வரையில் ஒரு வங்கியில் பணிபுரிந்த இவருக்கு நான்கு பிள்ளைகள், பத்து பேரப்பிள்ளைகள், மூன்று கொள்ளுப் பேரப் பிள்ளைகள். தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன், வித்தியாசமாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன், உடற்பயிற்சி (ஜிம்) கழகத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றார். ஆரம்பத்தில் இவருடன் பயிற்சி பெற்றவர்கள் இவரைக் கிண்டல் செய்தார்கள். ஆனால் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு, தினமும் உடற்பயிற்சி செய்து சுமார் இருநூறுகிலோ எடையையும் அனாயாசமாகத் தூக்கிக் காட்டி பரிசு பெற்றிருக்கிறார் இந்தப் பட்டாடி! □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களின் வேதனை


மறைமுகமான தொல்லை களுக்கு ஆளாகும் பெண் களின் அனுபவத் தொகுப்பு·



பெண்கள் இன்று பலதுறை களிலும் தொழிலில், கல்வியில், என்று ஆண்களோடு இணைந்து உழைக்கும், இந்தச் சூழ்நிலை யில், பெண்கள் சில மறைமுக மான தொல்லைகளுக்கு ஆளா கின்றனர். அவை தொடர்பாக நாம் சில பெண்களுடன் கதைத்த பொழுது அவர்கள் கூறிய தகவல் களில் சில.

## இவர்களின் சாதனை

தமிழீழப் பெண் சாதனை யாளர்களான, மாலா, யமுனா ஆகியோருடனான செவ்வி.



பெண் என்றால் பேதை என்ற எண்ணம் மறையாத எமது சமூ கச் சூழலில், அக்கருத்தை உடைத்துக் கொண்டு புறப்பட்ட பல பெண்கள் பல்வேறு சாத னைகளைப் படைத்துள்ளனர். கலை இலக்கியத் துறைகளில், கல்வியற் துறையில், விளை யாட்டுத் துறையில் என்று தமிழ்ப் பெண்கள் புரிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களின் வேதனை

↓

பெண்களில் அநேகமானோர் மிதிவண்டியில் சென்றாலும் கூட, சில பெண்கள் இன்றும் பேருந்துகளில் செல்வதைக் காணமுடிகின்றது. அவர்கள் நாளாந்தம் தமது பயணத்தில் எதிர்கொள்ளும் விடயங்கள் மிகவும் அருவருப்பூட்டுபவை. வண்டியில் மிகவும் நெருக்கமாக மக்களை ஏற்றுவதால் இந்த நெருக்கத்தைப் பயன்படுத்தி சில ஆண்கள், பெண்கள் மீது சில பாலியல் சேட்டைகளை பிரயோகிக்க முயல்கின்றனர். அவற்றை பொறுக்க முடியாது ''கொஞ்சம் முட்டாமல் தள்ளி நில்லுங்கோ'' என்று பெண்கள் கூறினால், ''முட்டாமல் போவதானால் தனிக்காரில் போயிருக்க வேண்டும்'', என்று நக்கல் வேறு. இதைக்கேட்டு சலித்த பெண்கள் தாம் இறங்கும் இடம் வரை இந்த இம்சைகளை மௌனமாகத் தாங்கியோ, அன்றி ஒதுங்கியோ இருந்து சகித்துக் கொள்கின்றனர். இப்படி இவர்கள் காட்டும் சகிப்புத்தன்மை இச்செயலில் ஈடுபடுபவர்களுக்கு மேலும் வசதியாக அமைந்து விடுகின்றது. பேருந்தில் பயணம் செய்வதை இப்படியான செய்கைகளால் தாம் அறவே வெறுப்பதாகக் கூறிய பெண்கள் பலர் தொலை தூரம் என்றாலும் தாம் மிதிவண்டியில் செல்வதையே விரும்புவதாகவும் கூறுகின்றனர்.

## இவர்களின் சாதனை

↓

சாதனைகள் அதிகம். அந்தவகையில் வீரதீர விளையாட்டில் சாதனை புரியும் இரு தமிழீழப் பெண் வீராங்கனைகளான செல்விகள் மாலா, யமுனா ஆகியோரை 'நாற்று' க்காகச் செவ்வி கண்டோம்.

❋ வீரதீர சாகச விளையாட்டில் துணிகரமாக இறங்கியுள்ளீர்களே இதனை எவ்வாறு ஆரம்பித்தீர்கள்?

☆ பாடசாலையில் ஓட்டம், ஈட்டி எறிதல், உயரம் பாய்தல் போன்ற விளையாட்டுகளில் ஆர்வமாக ஈடுபட்டோம். அந்த உந்துதலுடன், எமது அண்ணன், மச்சான், அயலவர்கள் என்று பல ஆண்கள் இவ் விளையாட்டில் ஈடுபட்டமையும் எம்மை ஊக்கப்படுத்தியது. எமது உறவினரான சாண்டோ செல்வராசா அவர்கள் எமது விருப்பத்தை ஏற்று, எமக்குப் பயிற்சிகளைத் தந்தார். உடல் இறுகுவதற்குப் படிப்படியான பயிற்சிகள் பெற்றோம். இவ்வாறு ஆரம்பித்து இப்போது 25 கிலோ கிராம் பாரம் தூக்கி அடிக்கக் கூடியதாக வளர்ந்து உள்ளோம்.

❋ வயிற்றில் வாகனங்களை ஏற்றிச் சாகசம் செய்கிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களின் வேதனை

↓

இனி மிதிவண்டியில் பயணம் செய்யும் பெண்கள் இப்படியான பிரச்சினைகளிற்கு உள்ளாக்கப் படுவதில்லையா என்ற வினாவிற்கு, அப்படிச்செல்லும் பெண்கள் தாம் தனித்து வரும்பொழுது நடந்தவை எனக்குறிப்பிடும் சில சம்பவங்கள் எமக்கு வியப்பை அளித்ததுடன், கவலையிலும் ஆழ்த்தியது. குறித்த சில சந்திகளில் நிற்கும் இளைஞர்கள் அவ்வழியே தனித்துக் செல்லும் பெண்களைக்கேலி செய்வதுடன், சற்று இருண்டபின் போக்குவரத்து குறைந்த இடங்களில் ஒரு பெண் தனித்து மிதிவண்டியில் வரும்போது மிதிவண்டியின் முகப்பைப் பிடித்து இழுத்தோ அன்றி இப் பெண்களின் முதுகில் தட்டவோ செய்கின்றனர். நடந்து வரும் பெண்களுக்கும் இவை விதிவிலக்கல்ல. எனக்குத் தெரிந்த ஒரு பெண் தான் தனித்து வரும் போது, தனக்கு மிக அருகாமையில் மிதிவண்டியில் வந்த ஒருவர் கேட்ட கேள்வியைக் கூறினார், அது எழுத்தில் எழுத முடியாத கேள்வி. ''இப்படியானவர்களைப் பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைக்கலாமே'' என்று கேட்டால், ''அடையாளம் சொல்லும் அளவிற்கு ஆட்களைத் தெரிவதில்லை'' என்ற பதிலே அனைவரிடமும் கிடைத்

## இவர்களின் சாதனை

↓

அது எவ்விதம் சாத்தியமாகிறது?

☆ காரினதோ, சைக்கிளினதோ ரயர் காற்றுப் போனால் எங்ஙனம் அதன் 'றிம்' பாதிக்கப் படுகிறதோ அது போன்றே எமது உடலிலும் காற்றை உள்ளிழுத்து வைக்காமல் விட்டால் வாகனம் ஏறும் போது எலும்புகள் முறிந்து விடும். நாம் காற்றை உள்ளிழுத்து வைத்தே இச் சாகசத்தைப் புரிகிறோம். இத்தகைய சாகசத்தைச் செய்வதற்கு எமது மனவுறுதியே கை கொடுக்கிறது.

❋ வாகனம் உங்கள் மேல் ஏறும்போது உங்கள் மனோநிலையைக் கூறமுடியுமா?

☆ ஆரம்பத்தில் பயமாகத்தான் இருந்தது. இப்பொழுது மக்களின் உற்சாகமும், ஆரவாரிப்பும் எமக்கும் உற்சாகத்தையே அளித்துள்ளது.

❋ எத்தகைய வாகனங்களை உடலில் ஏற்றுகிறீர்கள்? மேலும் எவ்வாறான சாதனைகளைப் புரிய விரும்புகிறீர்கள்?

☆ பயிற்சியின்போது கேம்பிரிஜ் கார், இப்பொழுது உண்டர் உழவுஇயந்திரம், எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களின் வேதனை

↓

தது இந்த வீதியோரத்து வில்லன்கள் காவல்துறையினரின் கண்களில் எப்படியோ மண்ணைத்தூவித் தப்பிவிடுகின்றனர்.

வேலை செய்யும் இடங்களிலோ சில பெண்கள் மேலதிகாரிகளால் துன்புறுத்தப்படுகின்றனர். அண்மையில் நான் படித்த ஒரு நூலில் கூட, கட்டுநாயக்கா சுதந்திர, வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் சுமார் எழுபதாயிரம் பெண்களில் சுமார் அறுபதாயிரம் பெண்கள், ஆண்களின் பல விதமான தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக கூறியிருந்தனர்.

இன்று பெண்களுக் கெதிரான வன்செயல்கள் பற்றி பேசவே பெண்கள் தயங்குகின்றனர். ஏன்? எமது சமூகம் குற்றம் புரிந்தவர்களைக் கண்டிப்பதை விடுத்து குற்றத்துக்கு ஆளான பெண்களையே குற்றவாளிகளாக்கி, பெண்களின் அடக்கமின்மையாலும், பிழையாலும் தான் இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன என்று தவறான வாதங்களை முன்வைப்பதையே காண்கின்றோம், கேட்கின்றோம்.

இப்படியான செயல்களால் இப்படியான பெண்கள் தமக்குள் தாமே குன்றிப்போகின்றனர்.

## இவர்களின் சாதனை

↓

காலத்தில் ஆண்கள் போன்று லொறி, மோட்டார்சைக்கிள் போன்றவற்றை வாயால் இழுத்து சாதனை புரிய விருப்பமும் எண்ணமும் இருக்கிறது.

❋ பெண்கள் அடங்கி ஒடுங்கி வாழ வேண்டும் என்ற சமூகச் சூழலில் பிறந்த உங்களுக்கு சமூகத்திடமிருந்தும் பெற்றோரிடமிருந்தும் ஆதரவு கிட்டியதா?

☆ இத்தகைய வீரதீரப் பயிற்சிகளை மேற்கொண்டபோது எமது சமூகத்தில் பலரும் ஏற்றுக் கொள்ளத் தயங்கினார்கள். எனினும் எமது பெற்றோர் உற்சாகம் தந்தனர். உறவினர்களும் தூண்டுதல் அளித்தனர். நாமும் துணிந்து நின்றோம். இன்று சமூகம் எம்மைப் பாராட்டுகிறது. எமக்குக் கிடைத்த வெற்றி எமது பெண்கள் எல்லோருக்கும் தூண்டுதலாக அமையும் என நாம் எண்ணுகிறோம்.

❋ உங்களது அன்றாட அலுவல்களில் இது பாதிப்பை ஏற்படுத்தவில்லையா?

☆ இல்லை. நாம் காலையும், மாலையும் இருமணி நேரம் பயிற்சி எடுப்போம். மிகுதி நேரத்தில் எமது வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களின் வேதனை

↓

இப்பிரச்சினைகளை எம்மிடம் தெரிவித்துக் கலந்துரையாடிய பெண்களுக்கும் இன்னும் இது போன்ற சம்பவங்களைச் சந்திக்க பெண்களுக்கும் நாம் கூறும் அறிவுரை,

''ஆண்கள் உங்களிடம் முரட்டுத் தனமாக நடந்தாலோ, கேலி செய்தாலோ அதற்காக நீங்கள் மன அமைதியை இழப்பதோ, அலட்சியமாக விடுவதோ தேவையில்லை. பொதுமக்களுக்கு தெரியும்படி இப்படியான நிகழ்ச்சியைப் பத்திரிகைகளில் வெளியிட முன்வரவேண்டும். அவர்களின் பெயர் தெரிந்தால் கூறவும் தயங்கக் கூடாது''

இப்படியான சமூக சீர்கேட்டை வெளிக்கொணர்வதில் பொய்யான கௌரவத்தை பாராட்டக் கூடாது. ஒவ்வொரு ஆண்களும் தமது மனைவியிடம், சகோதரியிடம், தாயாரிடம் பிற ஆண்கள் எப்படி மரியாதையுடனும் கௌரவத்துடனும் பழக வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்களோ, நினைக்கின்றார்களோ அதே போன்றே மற்றைய பெண்களுடனும் தாம் பழக வேண்டும் என நினைக்க வேண்டும். நல்ல முறையில் பண்புடன் பழகத்தெரியாவிட்டால் வருங் காலத்தில் தந்தையராகும்

## இவர்களின் சாதனை

↓

வேலைகள் செய்வோம். ஓய்வு நேரத்தில் புத்தகங்கள் படிப்போம். இதனால் பாதிப்போ, நெருக்கடிகளோ எமக்கு ஏற்படவில்லை.

❋ உங்களது மணவாழ்வில் இது பாதிப்பை ஏற்படுத்தாதா?

☆ ஏற்படுத்தாது என்றே எண்ணுகிறோம். ஆனாலும் எமது பெற்றோர் மணவாழ்வில் - குறிப்பாக குழந்தைப் பேற்றில் பாதிப்பை உண்டு பண்ணுமென அஞ்சுகின்றனர். இதனால் தொடர்ந்து இவ்வீரதீர விளையாட்டில் ஈடுபடுவதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

❋ வீரதீரச் செயல் புரியும் நீங்கள் உங்கள் கணவன் எப்படியிருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்?

☆ எம்மைப் போல சாதனை புரியும் ஒருவரை விரும்புகிறோம். ஆனால் அவர் வெறும் சாதனை வீரராக இருந்தால் போதாது. எமது தேசத்துக்குத் தன்னை ஈடுபடுத்தி தன்னலமற்ற சேவை புரியும் ஒரு கடமை வீரனான கணவனையே நாம் அடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களின் வேதனை

↓

போது இன்றைய பரம்பரை எப்படி பெருமை பாராட்ட முடியும். உணவிற்கு உப்பு அவசியம் போல் சமூகப்பண்பாட்டு வளர்ச்சிக்கு இளம் பரம்பரையின் பங்களிப்பு அவசியம். உயரிய நோக்குடைய இளம் சந்ததியினரைப் பெறாத நாடு எவ்வளவு முன்னேற்றமடைந்தாலும் அந்த முன்னேற்றத்திற்கிடையே பல கண்ணீர் கதைகளும் நிறைந்தே இருக்கும். எனவே கணீர் என்ற சிரிப்புடன், கண்ணீர் இன்றி எமது நாடு வாழ நாமெல்லோரும் நல்ல பழக்கங்களை பழகிக்கொள்வோம். □

- வன்னி உமா

## இவர்களின் சாதனை

↓

விரும்புகிறோம். இது எமது விருப்பம் மட்டுமே; பெற்றோரின் விருப்பமும் உள்ளதல்லவா ?

❋ இத்தகைய வீர தீரப் பயிற்சிகளைப் பாடசாலை மட்டத்துக்குக் கொண்டு செல்ல முடியுமா ?

☆ ஆம். வயது வந்த மாணவர்களுக்கு உடற்பயிற்சியின் ஓர் அங்கமாக இப்பயிற்சிகளை அளிக்கலாம்.

புன்னகையுடன் எமக்குவிடையிறுத்த செல்விகள் மாலா, யமுனா ஆகியோரிடமிருந்து விடை பெறுமுன் ''இப்பயிற்சியில் ஈடுபட விரும்பும்பெண்களுக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள் ?'' எனக் கேட்டோம். '' எல்லாவற்றுக்கும் தேவை மனவுறுதியே. அது இருந்தால்தான் சாதனை புரிய முடியும்'' என்றனர் புன்னகை மாறாமலே. □

---

அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த ஞானச்செருக்கும்
இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்.

* * *

விழாமல் இருப்பதல்ல உனது வெற்றி. ஒவ்வொருமுறை
விழுந்தபோதும் மீண்டும் எழுந்துநிற்பதுதான்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களை எடுப்பு

மங்கையரே உங்கள் மனக்குகையில் மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் சிக்கிக்கிடக்கும் சந்தேகங்களை வாழ்க்கைப் பிரச்சினைகளை கேள்விகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

நாற்றின் அடுத்த இதழில் இருந்து வெளிவரும் களை எடுப்புப் பகுதியிலே தகுந்த விளக்கம் அளிக்கப் பட்டு உங்கள் வாழ்க்கை செழிப்புற மிளிர, வளர, வாழ நாற்று 'களை எடுப்பு' மூலம் உதவி செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கேள்விகள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

'நாற்று' பணியகம்
இராசவீதி, கல்வியங்காடு,
கோப்பாய்.

குறிப்பு: தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'களை எடுப்பு' எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

*பெண்ணுக்கு விடுதலை நீ(ரி)ல்லை என்றால்*
*பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை.*
- பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனந்தம் பொங்கி
நிற்கும்
எல்லையற்ற
மகிழ்வோடு கலை
எங்கும்
ஊற்றெடுக்கும்
எங்களினம் வாழ
அவை வாழும்.

நேற்றிருந்த
வீட்டினிலே
நாதவொலி
கேட்கும்.

வாடைக் காற்று
வீசி வர
வண்ணத் தமிழ்
மேனி வரும்
ஆடை கட்டி
எங்கள் மண்

நாலு திசைகளிலும்
எங்கள் பெருமையை
சேர்க்கும்.
கலைகள் எங்கள்
வாழ்வின் உயிர் மூச்சு
அதிற் கண்டிடுவோம்
எங்களது மூச்சு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடன அரங்கேற்றம்

மாசி மூன்றாந்திகதி கணபதிப்பிள்ளை தமிழ்ச்செல்வியின் நாட்டிய அரங்கேற்றம் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது. இந்து மகளிர் கல்லூரியில் உயர்தர மாணவியாகிய இவர் தமது 5 ஆம் வயதிலிருந்தே நடனம் பழகத் தொடங்கியவர்.

தமிழ்ச் செல்வியின் குருவாகிய திருமதி. ஞானமணி செல்லையா அவர்கள் கலாஷேத்திராவில் முறையாக பரத நாட்டியம் பயின்றவர். இப்பொழுது பாரதி கலாமன்றத்தினூடாக இதுவரை பதின்மூன்று மாணவிகளின் அரங்கேற்றத்தை முடித்து பதின்நான்காவது மாணவியாகிய தமிழ்ச் செல்வியின் அரங் கேற்றத்தைத் தனது அறுபதாவது வயதில் முடித்துள்ளார்.

நடனம், சங்கீதம், லயம், பாவம் இவை மூன்றும் சேர்ந்த கலை யாகும். நமது கலாச் சாரத்தின் சிறப்பான வெளிப்பாடு பரத நாட்டியம் இது சமயம், தத்துவம், கலை என்பன சேர்ந்து கலந்துள்ள சிறப்புடையது. சமூகத் தின் தேவை கருதி தனிமனித விருப்பு வெறுப்புக்களிற்கு அப்பாற் பட்டு எமது கலைப்படைப் புக்கள் இருக்க வேண்டும். பரதநாட்டியம் இன்று புதுப் பொலிவுடனும், புதிய கருத்துக் களுடனும் காலச்சூழ் நிலைக் கேற்ப புதுமெருகுடன் மிளிர் வதைக் காண்கின்றோம். ஒரு கருத்தை வாய் மொழி மூலம் சொல்வதைவிட கண்களில் காணக்கூடியதாக அக் கருத் தை கலை வடிவமாக்கும் போது அது கருத்துச் செறிவு டையதாகவும் இருக்கின் றது. இந்த வகையில் அபிநயங்கள் எமக்கு உதவு கின்றன.



அரங்கேறுபவர்கள் எல்லாம் அரங்கில் வெற்றி பெற்றுள்ளார்களா? என்றால் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே வெற்றிக்குரியவர்களாக உள்ளனர். இந்த வரிசை யில் செல்வி. தமிழ்ச் செல்வியும் சேரவேண்டும் என விரும்புகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுலகில்.......

# மாட்டினா நவ்ரறிலோவா.

அசாதாரணப் பெண்மணியான மாட்டினா முன்பு நீல் ஆம்ஸ்ரோங், எட்மண்ட் ஹிலாரி போன்றவர்கள் போன்று, விசேட உணர்வுகளை உடையவராக விம்பிள்டன் விளையாட்டு மைதானத்தில் பிரகாசிக் கின்றார்.

உலகில் பெண்களிற்கான விளையாட்டுகளில் பெரும் வெற்றிகளையீட்டி மாட்டினா புரிந்துள்ள சாதனைகள், உலகின் உயர்ந்த சிகரமாகிய சந்திரனில் காலடி வைத்தவர்களது செயல்திறனுக்கு ஈடானது.

17 ஆவது வயதில் விளையாட்டுலகில் பிரவேசித்து கடந்த 21 வருடங்கள் காலமாற்றங்களுடன் விளையாட்டுத் துறையில் பல போட்டிகளை எதிர்நோக்கியவர்தான் மாட்டினா நவ்ரறிலோவா, பெண்களிற்கான முதலாவது திறந்த வெளித் தொழில் ரீதியான விளையாட்டின்போது மாற்றமின்றி பின்பற்றி வரப்பட்ட பழைய விளையாட்டு முறையை ஒதுக்கிவிட்டு, பரிகாசங்களையும், கேலிகளையும் புறக்கணித்து, ஆரவாரத்துடன் நவீன விளையாட்டுலகில் புன்னகையுடன் தனது பங்கை ஆரம்பித்தார்.



அடுத்து அவர் விரும்பிய பாணியில் தனது விளையாட்டுக்களை தொடர்ந்தார்.

1982–1986 ஆண்டுகளிற்கிடையில் மாட்டினா விளையாட்டுலகில் மிக உன்னத நிலையை அடைந்திருந்தார். அப்பொழுது 441 தனிப்பட்ட போட்டிகளில் 427 போட்டிகளில் வெற்றியீட்டினார். இது அடுத்த 5 வருடங்களில் மற்றவர்களுடன் ஒப்பிடமுடியாத வெற்றியாகும்.

மாட்டினா பல ஆட்டங்களில், உள்ளேயும் வெளியேயும் பல சாதனைகளைப் புரிந்து வெற்றிவாகை சூடினார். என ஓர் அவதானி கூறுகின்றார்.

இடதுகை ஆட்டக்காரரான மாட்டினா இந்த உலகத்தையே தமது கைக்குள் அடக்கியுள்ளார்.

இவரின் சாதனைகள்:

அமெரிக்க ஐக்கிய நாட்டில் நடந்த அகில அமெரிக்கப் போட்டிகளில் நான்கு தடவை வெற்றியீட்டினார்.

எட்டு நாடுகளில் தனிநபர் ரென்னிஸ் போட்டிகளில் வென்றார். ரெனிஸ் விளையாட்டுகளில் பெயர்போன விம்பிள்டனில் ஒன்பது தடவை வெற்றியீட்டி உலக சாதனையை நிலை நாட்டினார்.

வட அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் உலகப்புகழ் வேர்ஜனியாலிம்ஸ் கிண்ணத்தை 12 தடவை தட்டிக்கொண்டதை கௌரவிக்குமுகமாக சிக்காக்கோ 1992 ஆம் ஆண்டு மாசி 12 ஆம் திகதியை மாட்டினா நவரற்றிலோவா தினமாக பிரகடனப்படுத்தியது. இவர் உலகப்புகழ் பெற்ற 1438 ஆட்டங்களில் வெற்றியீட்டிப் பரிசாகப் பெற்ற தொகை 20,052,227 அமெரிக்க டொலராகும்.

ஆம் பெருமைக்குரிய பெண் மாட்டினா, தான் பெற்றதை விட அதிகம் விளையாட்டுலகிற்கு வழங்கினார்.

விளையாட்டுத்துறையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள மாட்டினாவிற்கு நாற்று தன் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமையடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்று

# "பெண்" ஆய்வுகளும் அதன் தேவைகளும்

**எமது வரலாற்றில் பெண்ணின் நிலைபற்றிய, பெண்ணின் வெவ்வேறு பரிமாணங்கள் பற்றிய ஆய்வும் முக்கியமானதாகும்.**

எந்தவொரு நாட்டுக்கும் அந்தந்த நாடு சார்ந்த தனித்துவமான அரசியல், பொருளாதார சமூகவாழ்வு காணப்படுவதை இலக்கிய வரலாற்று ரீதியாகவும் அரசியல்வரலாற்று மூலங்களில் இருந்தும் நாம் அறிந்து கொள்ளலாம். நாட்டின் அமைவிடம், நாடு அமைந்துள்ள இயற்கைச் சூழ்நிலை, தட்பவெட்பநிலை, அங்குவாழும் மக்கள், அவர்கள் பேசும் மொழி, அவர்களது இனம் எனபவற்றுக்கு ஏற்ப அந்தந்தநாட்டு மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்பவை வேறுபடும். ஒரே நாட்டிலே கூட அந்நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வாழும் மக்களிடையே இன, மொழி, மத வேறுபாடு காரணமாக இத்தகைய வேறுபாடுகள் காணப்படும். "புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல காலவகையினானே" என்பதற்கமையக் காலமாறுபாடு காரணமாகவும், அரசியல்மாற்றங்களினாலும், விரைவாக முன்னேறி வரும் அறிவியல் தொழில்நுட்பம் காரணமாகவும், எத்தனையோ மாற்றங்களும் வளர்ச்சிப்போக்குகளும் சமூகம் சார்ந்த நடைமுறைகளில் ஏற்பட்டு வருகின்றன.

ச. கலாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அசைவியக்கத்தின் தொடர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் வெவ்வேறு வழிகளில் துணையா கிறாள் என்ற நிலையில் எந்த வொரு சமூகத்திலும் பெண்ணா னவள் முக்கியம் பெறுகி றாள். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்று பெண்ணின் ஏழு பருவங்களை வரையறை செய்யும் இலக்கியங் களிலாகட்டும், சிறுமியாக, மகளாக மனைவியாக, தாயாக, விதவையாக, கணவனால் கைவி டப்பட்டவளாக, விவாகரத்து பெற்றவளாக என்று நாம் அன் றாடம் எமது வாழ்க்கை அனு பவத்தில் காண்கின்ற பெண்க ளாகட்டும்இந்த நிலைகள் யாவற் றிலும் பெண்ணாக இருத்தல் காரணமாக நாளாந்தம் எத்த னையோ துன்பங்களும் துயரங் களும் அவளோடு தொடர்ந்து கொண்டே வருகின்றன. வாழ்ந்து கொண்டிருக்கின்ற, வாழவேண் டிய நிலையிலுள்ள உயிரினங்கள் அனைதததும் தமதுவாழ்நிலையில் எததனையோ இடர்களையும் பல்வேறு சோதனைகளையும் தாண்டவேண்டியிருப்பது பொது வான நிலைதான். எனினும் தான் பிறந்த சமூகத்தில் 'பெண் ணாக இருத்தல்' காரணமாக அவள் வாழும் சமூகம், சமூக அமைப்பு சார்ந்த பிரத்தியேக மானபண்பாட்டுக் கூறுகளையும், கட்டுப்பாடுகளையும் விதிததுள்ள மையை நாம் அனைவரும் அறிவோம்.

சமூகத்தின் அங்கத்தவர்க ளாக உள்ள ஆண்களும் பெண் களும் இணைந்து நடந்தால் தான் நம்பிக்கையுள்ள, உறுதி யான எதிர்காலத்தை நோக்கி முன்னேற முடியும். தந்தை யாக சகோதரனாக, கணவனாக, மகனாக, மாமனாக, நண்பனாக பெண்ணின் வாழ்வில் அவளது ஒவ்வொரு நிலையிலும் ஆணா னவன் பங்கு கொள்ளுகிறான். இதே போன்று ஆணின் வாழ் விலும் தோழியாக, தாயாக, மகளாக, சகோதரியாக, மனை வியாக, அண்ணியாக, மாமியாக என்று பெண்ணும் தன்னை இணைத்துக் கொள்கிறாள். குடும்பம்சார்ந்த உறவு நிலை களிலும் சரி, சமூகம்சார்ந்த நடை முறைகளிலும் சரி ஆணும் பெண்ணும் அன்பு செய்தும், ஆதரவு அளித்தும், உற்றவிடத்து உதவியும் வாழும்நிலை இயல் பானதாகும். ஆனால் சமூக நடை முறைகளில், பண்பாட்டில் மத நம்பிக்கைகளில், சட்டரீதியான செயற்பாடுகளில், பெண்ணினது உடலியல் ரீதியான, உளவியல் ரீதியான, குடும்பஅமைப்பு ரீதி யான, தொழில் ரீதியான நிலை களில் பெண் தொடர்பான மரபு வழி நடைமுறைகளில், கொள்கை களில் சமூக எதிர்பார்ப்புகளில் என்று பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள் ஏராளம் ஆகவே பெண்ணினது பிரச்சினைகளும் இந்தப்பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்குரிய வழிகளும் பற்றி நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கும்போது பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பொது வானவை. எனினும் பிரச்சினை களுக்குரிய காரணங்களும், பிரச் சினைகளுக்குரிய தீர்வுகளும் நாட்டுக்கு நாடு, சமூகத்திற்குச் சமூகம் வித்தியாசப்படும் என்ப தில் ஐயமில்லை.

உதாரணமாக இந்தியாவில் உள்ள பெண்களுக்கும் ஈழத்தில் உள்ள பெண்களுக்கும் பிரச்சி னைகள் உண்டு. அதிலும் குறிப் பாக இந்தியாவில் உள்ள தமிழ்ப் பெண்களுக்கும் ஈழத்தில் உள்ள தமிழ்ப் பெண்களுக்கும் பிரச் சினைகள் உண்டு. ஆனால் அந்தப் பிரச்சினைகளுக்கான காரணங்களில் வேறுபாடு உண்டு. திருமணமானதும் கணவ னின் வீட்டில் வாழ்வது இந்திய மரபு. திருமணமானதும், பெண் வீட்டில் கணவன் வாழ்வது ஈழத்து மரபு. (கூட்டுக்குடும்ப அமைப்பும் தனிக்குடித்தனமும் இருநாட்டிலும் உண்டு) தாய் மாமனைத் திருமணம் செய்தல், சீதனப்பொருட்களாக தளபாட ங்கள்,எவர் சில்வர் பொருட்கள். ஸ்கூட்டர் போன்றவற்றை கொடுத்தல், சீமந்தம், வளை காப்புபோன்ற சடங்குகள் செய் தல் திருமணம் தொடர்பான இந்திய நடைமுறைகள், இந்த நடைமுறைகள் ஈழத்தில்இல்லை. இந்தியாவில் திருமணம் செய்த பின்னர் கணவன் வீட்டில் வாழ் வதனால் தான் வாயு அடுப்பு வெடித்து சாவடையும் மருமக ளின் பரிதாப நிலைகளும் மாமி யார் கொடுமை பற்றிய தகவல் களும் கூடுதலாக வருகின்றன. ஈழத்தில் மாமியார் கொடுமை யும், மருமகளின் சாவுகளும் இல் லாமல் இல்லை. ஆனால் இவற் றுக்கான காரணங்களில் வேறு பாடு உண்டு. இதே போன்று உணவு, உடை போன்ற விடயங் களிலும் வேறுபாடு உண்டு.

ஒருவனுக்கு ஒருத்தியையும் ஒருத்திக்கு ஒருவனையும் வரை யறைசெய்து தமிழ்ப்பண்பாட்டில் வாழும் பெண்களுக்கும் இந்த வரையறையற்ற அல்லது இந்த வரையறையை இறுக்கமாகப் பேணாதசமூகமொன்றில்வாழும் பெண்களுக்கும் இடையில் அவர் களின் பிரச்சினைகளுக்கிடையி லும் நிறைய வேறுபாடு காணப் படுகின்றது, பிரச்னைகளுக்கான காரணகாரியங்களில் வேறுபாடு காணப்படுவதைப் போன்று அவற்றுக்கான தீர்வுகளிலும் வித்தியாசமான நிலைகாணப் படும்.

எனவே ஈழத்தில் உள்ள பெண்களுக்கான அனைத்துப் பிரச்சினைகளையும் எடுத்து நோக்கும் போது குடும்பம் சார்ந்த, சமூகம்சார்ந்த தொழில் ரீதியான, உளவியல் ரீதியான, உடலியல் ரீதியான என்ற அனைத்து நிலைகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் எமது மண்சார்ந்த மரபுகளின் அடிப்படையில் அமைந்த ஆய்வு அவசிய மானதாகும்.

ஈழத்தில் பெண்ணாக இருத்தல் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுக்கும் போது அந்தப் பிரச்சினைகளுக்கான மூலகாரணங்களை இனங்காணவேண்டும். இந்த இனங்காணும் முயற்சி சரியாக இருந்தால் தான் அவற்றுக்கான தீர்வுகளும் சரியாக அமையும்.

எமது தாய்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம் ஈழத்தமிழர் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டம் ஒன்றில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இங்கு நடக்கும் விடுதலைப் போராட்டம் பல்வேறு துறைகளிலும் புதிய வரலாற்றை தொடக்கி வைத்துள்ளது. இத்தகைய முக்கியமான காலகட்டத்தின் ஒரு திருப்புமுனையாக பெண்போராளிகளின் வீரமும் அவர்களின் செயற்பாடுகளும் அமைந்து காணப்படுகின்றன.

ஒரு சமூகத்தின் நிலையை ஆராய்வதற்கு சிறந்த வழிகளில் ஒன்று அந்த சமூகத்தில் பெண்ணின் நிலையை ஆராய்வதாகும் என்பதற்கமைய எமது வரலாற்றில் பெண்ணின் நிலைபற்றிய, பெண்ணின் வெவ்வேறு பரிமாணங்கள் பற்றிய ஆய்வும் முக்கியமானதாகும்.

வரலாற்றடிப்படையில் அரசியல் சார்ந்த சமூகம்சார்ந்த உண்மையான ஆய்வு எவ்வளவு அவசியமானதோ அதே போன்றுதான் பெண் சார்ந்த ஆய்வுகளும் முக்கியமானதாகும்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து நிகரற்ற சாதனைகளைப் படைத்துவரும் பெண் போராளிகளின் வீரம் வெளிக்கொணரப்படவேண்டும். அத்துடன் போரினால் ஏற்பட்ட அனர்த்தங்களின் விளைவாக அகதியாய், அநாதையாய், விதவையாய், அங்கவீனமுற்றளாய், கணவனால் கைவிடப்பட்டவளாய் வெளிநாடுகளுக்குச் சென்று வெவ்வேறு வகையான துயரங்களுக்கு உள்ளாகுபவளாய், வீட்டுப்பொறுப்புகளையும் தானே தாங்கி தொழிலையும் செய்யவேண்டிய நிலையிலுள்ளவளாய்,சுயதொழில் செய்பவளாய்

நாளாந்த கூலிக்கு செல்பவளாய் உயரதிகாரியாய், எழுத்தாளர்களாய் குடும்பப் பெண்ணாய், திருமணமாகாதவளாய் என்று நாம் தினசரி நடைமுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கும் எமது நாட்டுப் பெண்களின் எத்தனையோ பிரச்சினைகளை, வளர்ச்சிகளை, பின்னடைவுகளை, வளர்ச்சியால் ஏற்பட்ட விளைவுகளை, சமூக எதிர்பார்ப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களை, மாற்றமின்மைகளை ஆராய வேண்டும்.

பெண்ணினது வளர்ச்சியை, வளர்ச்சிக்கு தடைகளாக உள்ளவற்றை, பெண்ணினது தளைநீக்கத்தை, சமூக மரபுகளில் ஏற்பட வேண்டிய நெகிழ்ச்சிப் போக்கை, சமுதாய மரபுகளில் காணப்படும் குறைபாட்டை, இக்குறைபாடுகளின் நிவிர்த்தியை எடுத்தியம்பும் இலக்கிய வடிவங்கள் ஈழத்தில் குறைவாகவே உள்ளன. பெண் எழுத்தாளர்களது தொகையும் குறைந்தளவே உள்ள எமது நாடடில் முன்னேறி வரும் அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிக்கமைய ஆய்வுகளும் வளரவேண்டிய தேவை உள்ளது. காலத்தின் பதிவுகளாக, தடயங்களாக எமது மண்ணையும் பெண்ணையும் ஆதாரமாகக் கொண்ட ஆக்கங்களின் அவசியம் உணரப்பட வேண்டும். அதே நேரம் நாம் அகவளர்ச்சி ரீதியிலும் எமக்குள்ளேயே வளர்ச்சியடைந்தால் தான் இந்த ஆய்வுகளின் தேடலும், ஆய்வுக்கான தீர்வுகளும் வெற்றியளிக்கும். உள்ள வளர்ச்சியும் சிந்தனை விரிவும் கூடிய அகரீதியான உணர்வு மேலோங்கும் போது பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் சாத்தியமாகும்.

"நன்றே செய்க அதை
இன்றே செய்க."



திருடன்:- எனக்கு உதையாதையுங்கோ அம்மா உங்களுக்கு கறாட்டி தெரியும் என்று தெரிந்து இருந்தால் நான் சங்கிலி திருடவந்திருக்க மாட்டன்"

பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர் - பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ தாபரிப்பு ○

தாபரிப்பு என்பது திருமணமான ஒரு பெண் தனது கணவனிடம் தனக்கோ அல்லது தனது குழந்தைக்கோ உரியசெலவை மாதாந்தம் கொடுக்கும் படி சட்டமூலம் கோருவதாகும். ஒரு பெண் சட்டமூலமோ அன்றி சமயாசார முறைப்படியோ திருமணம் செய்திருந்தால் மட்டுமே தனக்கு தாபரிப்பு கோர உரிமையுடையவர் ஆவார்.

# பெண்களும் தமிழீழச் சட்டங்களும்

அண்மையில் தமிழீழ நீதிமன்றில் பதினேழு வயதுடைய (திருமணமாகாமலே குழந்தை பெற்றுக்கொண்ட) பெண் ஒருவர் அந்தக் குழந்தை உண்டாவதற்கு காரணமாகிய ஆணிடம் தனது குழந்தைத் தாபரிப்பு கோரி செய்து கொண்ட மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிடப்பட்ட பெண் - ஆண்ஏற்கெனவே திருமணமானவர் என்பது தெரிந்தும், அந்த ஆணுடன் உடலுறவு வைத்துக்கொண்டதன் மூலம் உருவாகிய குழந்தைக்கே தாபரிப்பு கோரினார். ஆணின் முதல் திருமணம் வலுவுடையதாக இருப்பதாலும், இத்திருமணவிபரம் தெரிந்து கொண்டே இந்தப்பெண் குறித்த நபருடன் உறவு வைத்துக் கொண்டதன் காரணமாகவுர் இவர் தனக்கு தாபரிப்பு பெறும் உரிமையை இழந்துள்ளாம். எனவே நீதிமன்று குறித்த பெண்ணிற்கும், குறித்த ஆணிற்கும். இடையிலான எட்டுமாத வயதுடைய குழந்தைக்கு ''தமிழீழச் சட்டக் கோவை குடியியல் தவறுகளும் நிவாரணங்களும்'' (பக்கம் 26 பிரிவு 05 ''ஈ'') கீழ் மாதாமாதம் 600/- ஐச் செலுத்தும்படி மன்று எதிர் மனுதாரராகிய ஆணிற்கு பணித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தாபரிப்பு படியானது பொருளாதாரநிலை, சூழ்நிலைக்கேற்ப அதிகரித்துச் செல்லக் கூடியதாகவுள்ளது.

பெண்களே! இந்தப் பெண்ணைப்போன்று நீங்களும் வாழ்வில் ஏமாந்து விடாமல் இருக்க இப்பெண்ணின் கதை ஒரு படிப்பினையாகட்டும். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு ஒரு நிமிடம்! பேசப் போவோமா?

ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இருக்கும் ஒரு இடத்தில் முன்னால் நின்று தன்னம்பிக்கையுடன் பேசும் போது ஏற்படும் சுகம் மிக அலாதியானது போங்கள்! நீங்கள் ஒரு முறை அந்தச் சுகத்தை அநுபவித்தால் தான் தெரியும்.

## கோகிலா மகேந்திரன்

அவர் பல்கலைக்கழகத்தில் படித்து எம். ஏ. பட்டம் பெற்று விட்ட ஒரு பெண்மணி. படிப்புக்கு ஏற்ற பொறுப்பான பதவியில் இருப்பவர். ஒரு நாள் இவர் படித்த கல்லூரி நிர்வாகத்தினர், தமது பரிசளிப்பு விழாவுக்கு இவரைப் பிரதம விருந்தினராக அழைக்க வந்திருந்தனர். அழைப்பு விடுக்கப்பட்ட பின் இப் பெண்மணி சிறிது யோசித்தார். அவர்கள் சொன்னார்கள்.

''ஏன் யோசிக்கிறியள்? வாறது கஷ்டம் எண்டால் நாங்கள் வாகனம் அனுப்புறம்''

அதற்கு எம். ஏ. பட்டதாரி சொன்னார்.

''இல்லை அது கஷ்டமில்லை. நான் சைக்கிளில் வருவன். உங்கடை விழாவுக்கு வந்து பரிசு குடுக்கிறன் ஆனா... என்னைப்பேசச் சொல்லிக் கேளாதேங்கோ......''

பிரதம விருந்தினர் ஒரு வசனமாவது பேசாவிட்டால் எப்படி? ஆம். எம் மத்தியில் இப்படிப் பல பெண்கள் இருக்கிறார்கள்! அவர்கள் கற்றவர்கள். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு விடயங்கள் பல தெரியும். ஆனால் தெரிந்ததை நாலு பேருக்கு முன்னால் சொல்ல முடியாது. சபைக்கூச்சம்!

பிற்காலத்தில் மிக பிரபலமான பேச்சாளர்களாக மாறிய பலருக்கும் கூட ஆரம்பத்தில் இப்பிரச்சினை இருந்தது என்பது எமது மனத்துக்கு ஆறுதல் தரும் விடயம். சகோதரிகளே! உலகின் மிகச்சிறந்த பேச்சாளர்களில் பலர் எமது பேச்சைக் கேட்க இருப்பது எம்மைத் தூண்ட வேண்டும் அல்லவா? உற்சாகம் தரவேண்டும் அல்லவா? எமது மூளையைத் தெளிவாக இயங்கச் செய்ய வேண்டும் அல்லவா? எம்மிடம் இவை இருந்தன என்று எமக்கே தெரியாத விடயங்கள், எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாம் வழுக்கிக் கொண்டு ஓடிவரவேண்டும். ஓடி வந்து தமது கைகளை எமக்கு

---

**முதலில் நான் ஒரு நல்ல பேச்சாளராய் வரவேண்டும் என்று தீர்மான ஆசை மனதில் இருக்க வேண்டும். அதனால் வரக்கூடிய பல நன்மைகளை வரிசைப்படுத்திப் பார்த்துக் கொள்ள வேண்டும்.**

---

ஒருவர் எனக் கருதப்பட்ட ஆபிரகாம் இலிங்கனுக்கும் கூட அவர் பேசத்தொடங்கி ஒரிரு நிமிடங்களுக்குள் ஒரு பதற்றம் காணப்படுமாம், குரல் மாறி, முகம் கறுத்துக் கஷ்டப்படுவாராம். ஆனால் ஒரிரு நிமிடங்களுக்குப் பிறகு சமாளித்துக் கொள்வாராம்.

அதுதானே! மனிதர்கள் முன்னே இருப்பதைக்கண்டு ஏன் பயப்பட வேண்டும்? மனிதர் முன் நீட்டி எம்மைத் தூக்கி விட வேண்டும். இது சாத்தியமாகாத ஒன்றா? இல்லை மிக இலகுவில் பழக்கத்தில் வரக் கூடிய ஒன்று... எப்படிப் பழகலாம்?

எந்த இடத்திலும் தனது கருத்தைத் தெளிவாகச் சொல்லக் கூடியவருக்கு சமுதாய ரீதியாக ஏற்படும் மதிப்பு, பொருளாதார நன்மைகள், சுய நிறைவு, நண்பர் பலர் உருவாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் வாய்ப்பு, தலைமை தாங்கக் கூடியவர் என்ற நம்பிக்கை...... இப்படி...... இப்படி...... நினைத்துப் பார்க்கலாம்..... பின் அந்த நிலையை நோக்கி மெதுவாக நகரலாம்.

பேசுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைகளை நாமே நமக்கு உருவாக்கிக் கொள்வதும் ஒரு வழி! சீஸர் தனது படையுடன் கோலில் (Cgaul) இருந்து இங்கிலாந்தில் இறங்கினார். டோவரில் இருந்து படைகள் திரும்பிப் பார்த்தன. அவர்கள் வந்த கப்பல்கள் யாவும் எரிகின்றன. இனி முன்னேறுவதையும் தாக்குவதையும் தவிர வேறுவழியில்லை. சீசர் செய்த புத்திசாலித்தனமான வேலை இது! அது போலவே சபைத் தலைவர்,

''இப்போது இவர் பேசுவார்''

என்று சொல்லி விட்டால் என்ன செய்வது? பேசுவதைத் தவிர வேறு வழி இல்லை. ஓரிரு நாள் பேசினால் மனத்துணிவு வந்து விடுமே!

பேசுவதற்கு முன் பேசும் விடயம் குறித்து தெளிவாக ஆயத்தம் செய்திருப்பது முக்கியம். ஒரு குருடு மற்றொரு குருடுக்கு வழிகாட்டுவது போல் எழுந்து நின்றால், இருந்து மனத்துணிவும் போய்விடும்.

தொடங்கக் கஷ்டப்படும் பேச்சாளர்களுக்கு ஒரு உடல் அசைவு உதவும். சுரும்பலகையில் தலைப்பை எழுதினால், அல்லது ஒரு புத்தகத்தைத் திறந்து மேசையில் வைத்தால் பதற்றம் சற்றுக் குறைந்து வீட்டில் இருக்கும் உணர்வு வரும். அதன் பின் பேசத் தொடங்கலாம். ஆனால் இது புதுப்பழக்கத்துக்கு மட்டும் செய்யப்படும் விடயமாக இருக்க வேண்டும்.

தேன் குடித்த நரிபோல - இன்பத்தை - அந்த நிறைவை - அனுபவித்தவர் பிறகு அதை விடமாட்டார். அத்தனை பேரையும் எங்களுக்குப் பின்னால் சிந்தித்தபடி எமமைத் தொடர்ந்து வரச்செய்யும் அந்த வேலை அப்போது 'ஏற்படும் வலிமை சேர் உணர்வு பெரும்நிறைவு தருவது. ஒரு உள்ளத்தின் மிக உயர் தேவைகளில் ஒன்றைத் திருப்தி செய்வது.

''பேசத் தொடங்குவதை விட ஒரு கசையடி பெறுவது நல்லது. பேசத்தொடங்கிய பின் அதை நிறுத்துவதைவிடச் சுடப்படுவது நல்லது'', என்றார் ஒரு அறிஞர். ஆம்! மிகச் சரளமாகப் பேசத் தொடங்கிய பிறகு அதை நிறுத்துவது கஷ்டம். அதனால் தான் 'மைக்' கிடைத்தால் மணிக்கணக்காக அதைப் பிடித்துக் கொண்டு தவிப்பவர் பலர்.

சகோதரிகளே, முதலில் எமக்கும் பேசும் திறமை உண்டு என்பதை நாம் புரிந்து கொள்வோம். ஏற்றுக் கொள்வோம். எமது திறமை குடத்தில் விளக்குப்போல் இருந்து பயனில்லை. எமது பேச்சாற்றல் வெளியே தெரிந்தால் தான் உலகு அதனைப் பயன்படுத்தும்! துணிவு கொள்வோம். மேடையில் ஏறுவோம். பேசுவோம்! □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனமான சமையலுக்கு.....

## இரட்டைச்சூட்டடுப்பு

இன்று படிக்காத பெண்கள் தான் சமையல் வேலை செய்கின்றார்கள் என்ற நிலையுடன், படித்து உத்தியோகம் பார்க்கும் குடும்பங்களில் கூட பெண்கள் மட்டுமே சமையலில் ஈடுபடும் நிலை காணப்படுகின்றது. சாதாரணமான அடுப்புகளில் சமையலை மேற்கொள்ளும் போது புகை, அனல் தாக்குதல், ஊதவேண்டியுள்ளமை

## அமைதியான மகிழ்ச்சியான குடும்ப வாழ்வுக்கு

போன்ற இன்னும் எத்தனையோ இடர்ப்பாடுகளினால் குடும்பங்களில் குழப்பங்களும் சச்சரவுகளும் காணப்படுகின்றன. பெருந்தொகையான பணம் விறகுக்காகச் செலவளிக்கப்படுவதால் குடும்பங்களில் ஒவ்வொரு நாளும் பிணக்குகள் உருவாகின்றன.

ஆனால் தமிழீழபொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தின், சக்திப்பகுதியால் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டைச் சூட்டடுப்புகள் இவற்றுக்குத் தீர்வாக அமைகின்றது. இந்த இரட்டைச் சூட்டடுப்புகளை ஊதத் தேவையில்லை. புகை, அனல் தாக்குதல் போன்ற சிக்கல்களுமில்லை இதன் பிரதான சிறப்பு அரைவாசி விறகை மீதப்படுத்துவதாகும். இதனால் உங்கள் குடும்பங்களில் சண்டைகளும் சச்சரவுகளும் குறைந்து முற்றாக மறைந்து விடும்.

கணவன் - மனைவி இருவருமே வேலைபார்க்கும் சூழலில் அதிகாலையில் எழுந்து அல்லலுற்று சமையலையும் முடித்த பின்பே வேலைக்கு செல்லும் எத்தனையோ குடும்பங்கள் இன்று சாதாரணம். இவர்களைப் போன்றோருக்கு மிகவும் உதவியாக முன்பு சமையல் செய்த நேரத்தின் அரைவாசி நேரத்தில் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் சமையலை முடிக்க இரட்டைச் சூட்டடுப்பு உதவுகின்றது. உங்கள் வீடுகளிலும் மகிழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான சூழ்நிலை நிலவச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

உங்களுக்கு உதவிசெய்வதற்கென்றே இன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப்பகுதியினர் இரட்டைச் சூட்டடுப்புகளைக் கட்டி வழங்குகின்றார்கள். அமைதியான, மகிழ்ச்சியான குடும்ப வாழ்வுக்கு என்றும் இரட்டைச் சூட்டடுப்பு உதவி செய்கின்றது.


# பாரதி படிப்பகம்

புத்தகப்பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி!
முன்னணி எழுத்தாளர்களின் தரமான

- நூல்கள்,
- சஞ்சிகைகள்,
- பத்திரிகைகள்,
- பெண்கள் சம்பந்தமான பிரத்தியேக நூல்கள், பாடசாலை மாணவர்களின் அறிவியல் நூல்கள் வாசிக்கவும்,

இரவல் எடுக்கவும் கிழமையில் 7 நாட்களும் தனது சேவையை வழங்குகின்றது,

## 'பாரதி படிப்பகம்'

## இராச வீதி, கல்வியங்காடு, கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

நாற்று

# எல்லைகளின் விளிம்பில்

நீங்களும் ஓர் முறை படியுங்களேன், பகுதியில் பெண்கள் தொடர்பான முற்போக்கான சிந்தனையைத் தூண்டக் கூடிய புத்தகங்கள் பற்றிய சிறு அறிமுகம் இடம் பெறுகிறது. இப்பகுதிக்கு நீங்கள் படித்த பெண்கள் தொடர்பான புத்தகங்கள் பற்றி எழுதுங்கள். இதன் மூலம் நீங்கள் தெரிந்து கொண்டவற்றை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். 'நாற்று' மூலம் உங்கள் கருத்துக்களை அனைவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். எல்லைகளின் விளிம்பில்...

☐ நீங்களும்
☐ ஓர் முறை
☐ படியுங்களேன்!

தென்னிந்திய எழுத்தாளர் வாஸந்தி அவர்களின் 'எல்லைகளின் விளிம்பில்' என்ற நாவல் முற்போக்கான பார்வை கொண்டது. இந்திய மத்தியதர வர்க்கத்தை வைத்து பின்னப்பட்ட கதையாக இருப்பினும் சில விடயங்களை குறிப்பாக முற்போக்கான சிந்தனைகளை தன்னுள்ளே கொண்டு வாழ நினைக்கின்ற மாலதி என்ற பெண்ணை எளிமையாக விளங்க வைக்கின்றது. அத்தோடு பழைமையில் ஊறிப்போனவளாக இருந்து, காலப்போராட்டத்தில் தனது எண்ணங்களை மாற்றி அநீதிக்கெதிராக போராடத் துணியும் ஆற்றல் பெற்றுவிட்ட மாலதியின் தாயையும் அழகாக எடுத்துக் காட்டுகிறது. இந் நாவலில் ஒரு சில விடயங்கள் எமது சமூகத்திற்கு ஒவ்வாததாக அமையலாம். அவற்றை விலக்கி விட்டு எமக்கு தேவையானதை மட்டும் நாம் எடுத்துக் கொள்வது சிறந்தது என எண்ணுகிறேன்.

இங்கு யார் எழுத்தாளர் எங்கிருந்து எழுதுகிறார் என்பதைவிட எதை எழுதுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே முக்கியமானதாகின்றது என்பதன் அடிப்படையிலே எல்லைகளின் விளிம்பில் ஒவ்வொரு பெண்ணும் குறிப்பாக இளவயதினர் வாசிக்க வேண்டும் எனப்படுகின்றது. எந்த விடயங்களையும் அறிந்து கொள்வதற்கு வாசிப்பு என்பது முக்கியமானதாகின்றது. இந்த வகையில் சிறந்த கட்டுரைகளை, பத்திரிகைகளை, கதைகளை வாசித்தல் அவசியமாகும்.

இங்கு முதலில் கதையை அறிமுகப்படுத்துவதன் நோக்கம் கதையானது சொல்லப்படுகின்ற விதத்தால் சாதாரண அறிவுள்ளவரினாலும் விளங்கிக் கொள்ளப்படக்கூடியது. இதைத்தொடர்ந்து ஏனைய வடிவங்களினூடாகவும் கருத்துக்களை விளங்கிக் கொள்ள முடியும். இனிப் படியுங்களேன். படித்துவிட்டு அந்த புத்தகம் பற்றிய உங்கள் கருத்துக்களையும் தெரிவியுங்கள். நீங்களும் அறிமுகவாளர்களாகுங்கள்.

-தயாகௌரி-


யாழ்ப்பாணத்தில்
சிறுவர்கள், மாணவர்கள், பட்டதாரி மாணவர்கள்
இவர்கள் அனைவருக்கும் உரிய
அறிவு சம்பந்தமான நூல்கள், வினாவிடை புத்தகங்கள்
பாடசாலை அலுவலக உபகரணங்கள். காகிதாதிகள்,
றப்பர் முத்திரைகள் பெற்றுக்கொள்ள இன்றே
நாடுங்கள்

ஸ்ரீலங்கா புத்தகசாலை
அன் அச்சகம்

நிதான விலையில் ஆசிரியர்களுக்கும், வியாபாரிகளுக்கும்
தகுந்த கழிவுடன் விசேட சேவையாற்றும்
ஒரே ஸ்தாபனம்

ஸ்ரீலங்கா புத்தகசாலை
அன் அச்சகம்

(ஒப்செற் பிறின்ற் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்)
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான
யன்னல் கண்ணாடி வகைகள்
மெத்தைகள் தளபாடங்கள்
போன்றவற்றை
குறைந்த விலையில்
பெற்றுக் கொள்வதற்கு என்றும்

**யாழ் நுகர்வோர்**
**காட்சியகம்**

441, காங்கேசன்துறைச் சாலை,
யாழ்ப்பாணம்.

உங்களின் பழைய புதிய புத்தகங்கள்
பத்திரிகைகள், சஞ்சிகைகள்
பாடசாலை மாணவருக்குரிய கொப்பிகள்
குறிப்புக் கொப்பிகள் ஆகியவற்றை
அழகாகவும் தரமான முறையிலும்
குறைந்த விலையில் பைண்டிங் செய்வதற்கு
இன்றே நாடுங்கள்

**"சாம்பவி**
**காகிதாதிகள் கட்டகம்"**

இராசவீதி, கல்வியங்காடு,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோப்பு வகையா, சீப்பு வகையா இல்லை
நகப்பூச்சு வகையா

பள்ளி சிறுமி முதல் பல்லுப்போன
பாட்டி வரை அழகு செய்திட
நாடவேண்டிய இடம்

அழகியல்
அழகு சாதன மாடம்

நவநாகரிக கைக்கடிகாரம் முதல் இன்னும் பல
அழகு சாதன பொருட்களை கொள்வனவு
செய்ய சிறந்த இடம்

அழகியல்
அழகு சாதன மாடம்

சோதியா வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்தவிலை



# சிறந்தசேவை

சகல விதமான காகிதாதிகள்,
பாடசாலை உபகரணங்கள்,
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
யாழ்நகரில் இன்று ஒரே ஸ்தாபனம்.

BOSECO

# பொஸ்கோ

இல. 03, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org